15.9.'57

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

செய்திகள்

சுதந்தர மலேயா

இதுவரையில் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்துவந்த மலேயா இப்போது போராட்டம் எதுவுமின்றி விடுதலை பெற்று, சுதந்தர நாடாகியது. செல்வம் கொழிக்கும் மலேயாவில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்து வந்த யூனியன்ஜாக் என்ற பிரிட்டிஷ் கொடி ஆகஸ்ட் மாதம் 31-ஆம் தேதி இறக்கப்பட்டு, மலாய் நாட்டின் சுதந்தரக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது. 50,690 சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள, 61 லட்சம் மக்கள் வசிக்கும் மலாய் நாட்டின் பிரதமராக துங்கு அப்துல் ரஹ்மான் என்பவர் பதவியேற்றார். மலேயாவில் 30 லட்சம் மலாய்க்காரர்களும், 23 சீனர்களும், 7½ லட்சம் இந்தியர்களும் அரை லட்சம் இதர நாட்டவரும் வசிக்கிறார்கள். மலேயாவின் செல்வ செழிப்புக்கு முக்கியக் காரணம் ரப்பர்த் தோட்டங்களே. இந்தியர்களுடைய உழைப்பினால் அந்தத் தோட்டங்கள் வளர்ச்சியுற்றன. ஆண்டுக்கு இருநூற்றைம்பது கோடி ரூபாய்க்கு மேல் மலேயா பிற நாடுகளுக்கு ரப்பரை ஏற்றுமதி செய்கிறது. உலகத்தில் உற்பத்தியாகும் ரப்பரில் மூன்றில் ஒரு பங்கு மலேயாவிலிருந்து தான் கிடைக்கிறது. மலேயா ஆசியா நாடுகளில் சக்தி பெற்ற நாடாகத் திகழ்ந்து இந்தியாவோடு சேர்ந்து உலக அமைதிக்குப் பாடுபடும் என்று நமது பிரதமர் ஆசிச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

குழந்தைகள் விழா

புதுக்கோட்டை குழந்தை எழுத்தாளர் கிளைச் சங்கத்தின் சார்பில் குழந்தைகள் விழா ஆகஸ்டு 14-ஆம் தேதி ஸ்ரீமதி பிருந்தாதேவி அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பலர் வேடிக்கைக கதைகள் கூறி குழந்தைகளை மகிழ்வித்தனர். முடிவில் இனிப்பு வழங்கப் பட்டது.

பாரதி திருநாள்

இம்மாதம் பதினொன்றாம் தேதி பாரதியாரின் திருநாளாகும். இந்த நாளை தமிழகமெங்கும் விழாவாகக் கொண்டாடினார்கள். சென்னை மா நகரத்திலும் பாரதியார் பிறந்த எட்டையபுரத்திலும் வழக்கம்போல் விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. பல இடங்களில் சிறுவர் சிறுமியர்க்குப் பாரதி பாடல் போட்டிகள் வைத்து, பரிசுகளும் வழங்கப்பட்டன.

'சுதந்தர யாத்திரை'ப் படம்

சுதந்தர யாத்திரை என்ற செய்திப் படம் சுதந்தர நாள் அன்று இந்தியாவெங்கிலும் திரையிடப்பட்டது. இந்தப் படத்தில் சுதந்தரப் போராட்டத்தில் பங்குகொண்ட தென்னாட்டுப் பிரமுகர்களையோ தலைவர்களையோ சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். தமிழ் நாட்டில் இந்தப் படத்துக்கு ஆட்சேபம் கிளம்பியது. இதன் காரணமாக, அதில் போதிய மாறுதல் செய்து மீண்டும் திரையிடுவதற்காக இந்திய சர்க்கார் பிலிம் பிரிவு இந்தப் படத்தை இப்போது வாபஸ் பெற்றுவிட்டனர்.

புத்தக வெளியீட்டு விழா

தேசபக்தர் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி சென்னை மேயராக இருந்த காலத்தில் புரிந்த பிரசங்கங்கள், வரவேற்புரைகள் ஆகியவற்றைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தக வெளியீட்டு விழாவுக்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் தலைமை வகித்தார். இந்தப் பிரசங்கங்களின் ஒரு பகுதியையேனும் பி. ஏ. வகுப்புப் பாடமாக வைக்க வேண்டும் என்று கூட்டத்தில் ஒருவர் குறிப்பிட்டார்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 **இதழ்: 18**

15 - 9 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
யானை என்ன யானை!	..	3
ஜன்னல் வழியே	..	4
வடிவேலன்	..	9
தழும்பு	..	14
துரோகத்தின் முடிவு	..	19
நீங்களும் நானும்	..	23
கடற் புலி	..	26
ஒருவனைக் கொண்டு..	..	28

அட்டைப் படம்: போட்டோ - புஷ்பத்துறை சுப்பிரமணியம்

செய்திகள் - 2-ஆம் அட்டை

பேனா நண்பர்கள் - 3-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

தங்க மாம்பழம்

'ராஜி' எழுதியது

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரிவாதிக் கிழவி வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்ப தேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரையில் ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசயமான கதை.

விலை ரூ. 2.00

மஞ்சள் பங்களா

ஜி. ஜயராமன் எழுதியது

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்து, கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர்களும் புத்தி வன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் சதிகாரர்களைக் கண்டு பிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிரமிப்பும் உண்டாக்குகிற கதை.

விலை ரூ. 1.00

புலிக்குட்டி

சித்திரக் கதை

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனையே தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட்டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங்குகிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளி வந்த அருமையான சித்திரக் கதை.

விலை 30 நயா பைசா

குழந்தைகளே!

இந்த மாதம் 11-ஆம் தேதி தமிழ்நாட்டின் ஒவ்வொரு பள்ளியிலும் ஊரிலும் பாரதியாரின் திருநாளைக் கொண்டாடினார்கள். பாரதியார் பாடல் போட்டிகள், பிரசங்கப் போட்டிகள் வைத்துப் பல இடங்களில் பரிசுகளும் அளிக்கப்பட்டன. இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு, திறம்பட வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குக் கண்ணன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்ணன் சித்திரப் போட்டியின் முடிவை இந்த இதழில் வெளியிடுவதாக அறிவித்திருக்கிறேன். சித்திரங்களைக் கண்ணன் தீபாவளி இதழில் வெளியிட எண்ணியிருக்கிறோம். ஆகவே அதற்கு முன் இதழான அக்டோபர் முதல் தேதி இதழில் முடிவை அறிவிப்பதே பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறோம். இந்தப் போட்டியில் 1800 பேர்களுக்கு மேல் கலந்துகொண் டிருக்கிறார்கள் என்பதை அறிந்து அனைவரும் ஆச்சரியப்படுவோம். பரிசுபெற்ற படங்கள் தவிர, தேர்ந்தெடுக்கப் பட்ட படங்களில் இருபத்தைந்து படங்களைச் சிறுவர் சித்திரக் கண்காட்சி நடைபெறும்போது வைக்க அனுப்ப இயலுமா என்று குழந்தை எழுத்தாளர் சங்கக் காரியதரிசி தெரிந்துகொள்ள விரும்பினார். தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சித்திரங்களை வரைந்தவர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியாகும். அவர்கள் தங்கள் இசைவை அறிவித்தால் நான் ஆவன செய்து கொள்கிறேன். கண்காட்சியில் இடம் பெறும் படங்களுக்குப் பரிசுகள் உண்டு என்றோ, அவற்றைத் திரும்ப அனுப்புவார்கள் என்றோ உறுதி கூறமுடியாது. பரிசளிப்பதும் சரி, திரும்ப அனுப்புவதும் சரி, சாத்தியமல்ல. பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் பார்த்து மகிழ்கிற திருப்திதான் அதற்குப் பரிசு. அதை விடப் பெரிய பரிசு ஏது?

கண்ணன் தீபாவளி மலரைப்பற்றி ஏதாவது கூறுவிட்டால் உங்கள் கடிதங்கள் என்னைச் சும்மா விடாது. தீபாவளி மலர் வேலைகள் ஆரம்பமாகி விட்டன. வழக்கம் போலத்தான் அதன் விலை. ஆனால் வழக்கத்தை விட விஷயச் சிறப்புகள் உண்டு. குழந்தைகளுக்காக எழுதுகின்ற எழுத்தாளர்களைத் தங்கள் புகைப் படங்களை அனுப்பிவைக்குமாறு முன்பு கேட்டுக்கொண் டிருந்தேன். அதற்கு இணங்கி, சிலர் அனுப்பிவிட்டார்கள். எஞ்சியுள்ளவர்களை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன். படங்களோடு, தங்களைப்பற்றிய சிறு குறிப்பும் அனுப்பிவைக்க வேண்டுகிறேன். இந்தப் புகைப்படங்களை மலரில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது என் உத்தேசம். அது நிறைவேற உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை.

இந்தக் கண்ணன் உங்களுக்குக் கிடைக்கும்போதே உங்கள் ஊர் விற்பனையாளரிடம் நீங்கள் கண்ணன் மலருக்குச் சொல்லிவைத்து விடுங்கள். கண்ணன் மலர் அளவாகவே அச்சிடுவதால் முன்னால் சொல்லி வைக்காதவர்களுக்குக் கிடைக்கும் என்று கூறுவதற்கில்லை. ஒவ்வொரு வருஷமும் சிலருக்கு மலர் கிடைக்காமல் போய்விடுகிறது. பின்னால் வருத்தப்பட்டு எழுதுகிறார்கள். அதற்கு இடம் கொடுக்க வேண்டாம். முன்னதாகப் பதிவு செய்துகொள்வதனால் உங்களுக்கும் நல்லது; எங்களுக்கும் நல்லது.

கண்ணன் தொடர்கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மஞ்சள் பங்களா இப்பொழுது புத்தகமாக வெளிவந்திருக்கிறது. சித்திரத் தொடர்கதையான புலிக்குட்டியும் புத்தக உருவில் வெளிவந்திருக்கிறது. பிரபல எழுத்தாளர் 'ராஜி' எழுதிய தங்க மாம்பழம் என்ற கதையும் புத்தகமாக இப்போது வெளிவந்திருக்கிறது. இந்த மூன்று கண்ணன் வெளியீடுகளும் நீங்கள் படித்து ரசிக்க வேண்டியவை. கண்ணன் வெளியீடுகளைச் சேர்த்துவைப்பவர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

—ஆசிரியர்.

யானை என்ன யானை?

யானை என்ன யானை?
  யானை, கொம்பன் யானை.

யானை மீது யாரோ?
  யானை மீது ராஜா.

யானை எங்கே போச்சு?
  யானை செத்துப் போச்சு.

ராஜா என்ன ஆனார்?
  நாட்டு மன்னர் ஆனார்.

நாட்டு மன்னர் எங்கே?
  நாட்டு மன்னர் நாமே!

நாமும் அவரும் ஒன்றோ?
  நம்முள் ஒருவர் ராஜா!

‘ சசிதேவன் ’

ஜன்னல் வழியே

ராஜன்

வெகு நேரமாக விளக்கு வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்த ராகினிக்குக் கண்கள் எரிச்சல் எடுத்தன. அவள் புத்தகத்தை மேஜையின்மேல் அவிழ்த்து வைத்துவிட்டு, மேஜையின் விளிம்பில் நின்று வெளிச்சத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்த மின்சார விளக்கை நிறுத்தினுள்.

கூடத்தில் இருள் பரவியது.

ஜன்னலுக்கு அப்பால் தோட்டத்தில், வெளியேயிருந்து வந்த மங்கிய வெளிச்சத்தில் ஓர் உருவம் நகர்ந்து மறைந்தது.

ராகினி சட்டென்று எழுந்து ஜன்னல் ஓரமாக ஓடிப்போய்ப் பார்த்தாள்.

தோட்டத்தில், மல்லிகைச் செடியின் கொடிகளைப் பந்தலில் படர விட்டுக்கொண்டிருந்தான் வடிவேலு. ராகினி அவனையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வடிவேலு கொடிகளைப் படர விட்டுவிட்டுப் பங்களாவின் தாழ்வாரத்திற்குப் போய் உட்கார்ந்துவிட்டான்.

வடிவேலுவின் போக்கு விசித்திரமாகத்தான் இருந்தது. பதினேழு வயது இருக்கும் அவனுக்கு. சுமார் பத்து நாட்களுக்கு முன் தோட்டத்து ஊஞ்சலில் உல்லாசமாக ராகினி ஆடிக்கொண்டிருந்தாள். அப்போது தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்த வடிவேலு, பங்களாவின் சுற்றுச் சுவருக்குப் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு அவளையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

ராகினிக்கு அவன் ஏன் அப்படிப் பார்க்கிறுன் என்று புரியவில்லை. அவள் கழுத்தில் டாலர் பதித்த அழகான தங்கச் சங்கிலியும், காதுகளில் உயர்ந்த ரக வைர ஜிமிக்கிகளும் மிளிர்ந்தன. அவைகளைத்தான் அவன் அப்படிப் பார்க்கிறுனு?

ராகினி ஊஞ்சலைவிட்டு இறங்கி, "யாரடா அது?" என்று அதட்டினுள்.

அவனுடைய பார்வை மாறியது. அவன் நின்ற இடத்தைவிட்டு நகர்ந்து வெளிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். கதவு திறக்கும் சத்தம் கேட்டதும், ரோஜாச் செடியின் பக்கத்தில் சுருண்டு படுத்துக்கொண்டிருந்த டாமி குரைத்துக்கொண்டு ஓடியது.

அவன் பின் வாங்கினுன். அவனுடைய முகம் பயத்தால் பீதியடைந்தது.

கோழை!

ராகினி டாமியை அதட்டினுள். அது வாலைச் சுருட்டிக்கொண்டு, தன்னுடைய பழைய இடத்துக்கே போய்விட்டது.

"யார் நீ?" என்று மீண்டும் கேட்டாள் ராகினி.

அவன் இரண்டடி முன் வந்து, "என் பெயர் வடிவேலு. திக்கற்றவன். படித்திருக்கிறேன்" என்றுன்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டாள் ராகினி.

"சுந்தரமூர்த்தி உங்கள் அப்பாவா?"

"ஆமாம்."

"அவரைத்தான் பார்க்க வேண்டும். அவருடைய கம்பெனியில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று கேட்கத்தான் வந்தேன்."

அவன் பேசியதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

ராகினி சிறிது நேரம் யோசனை செய்துவிட்டுச் சொன்னுள். "கம்பெனியில் வேலை காலியில்லை என்று வருகிறவர்களை எல்லாம் அப்பா திருப்பி அனுப்பிக்கொண்டிருக்கிறுர். உனக்கு எங்கே கிடைக்கப் போகிறது?"

அவன் ஏக்கத்துடன் அவளையே பார்த்தான். அவனைப் பார்க்கப்

பரிதாபமாக இருந்தது. ''தோட்ட வேலை செய்வாயா?'' என்று கேட்டாள்.

''கற்றுக்கொள்கிறேன். வயிற்றுப் பிழைப்புக்கு எதையாவது செய்துதானே ஆக வேண்டும்?'' என்றான் அவன்.

அன்றே அவள் அம்மாவிடம் சொல்லி அவனைத் தோட்ட வேலைக்கு வைத்துக்கொண்டாள்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்துத்தான் அவன் போக்கு விசித்திரமாக இருப்பதை ராகினி உணர்ந்தாள்.

ராகினி பள்ளிக்குப் போகும் போதும், காரில் ஏறும் போதும், தோட்டத்தில் உலாவும்போதும், ஏதாவது மறைவிடத்தில் நின்றுகொண்டு அவளையே பார்த்துக்கொண்டிருப்பான்.

அவன் ஏன் அப்படி அவளை ஒளிந்திருந்து கவனிக்கிறான்?

அவனால் தனக்கு ஏதாவது ஆபத்து வருமோ? கழுத்திலும் காதிலும் இருப்பதை அபகரித்துப் போகவே திட்டம் செய்கிறானோ?

ஒன்றும் புரியவில்லையே!

ராகினியின் அம்மாவும், சமையல்காரன் வேலாயுதமும்கூட அவனுடைய விசித்திரப் போக்கை கவனித்துவிட்டு, ராகினியிடம் எச்சரிக்கை செய்தார்கள்.

''அந்தப் பையனை நமக்கு முன் பின் தெரியாது. தெரியாமல் வேலையில் வைத்துக்கொண்டோமே! அவன் எதைச் சுருட்டிக் கொண்டு போகக் காத்திருக்கிறானோ?'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள் ராகினியின் அம்மா.

வேலாயுதம், ''அந்தப் பையன் ஒரு வேலையும் செய்யவில்லை. தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு எதையாவது கொத்துகிறான். ஒரு நிமிஷம் கழித்துப் பார்த்தால் செடிகளின் மறைவில் நின்றுகொண்டு ஜன்னல் வழியாக உள்ளே பார்க்கிறான். அவனுக்கு இப்போதே சீட்டுக் கிழிப்பது நல்லது'' என்றான்.

ராகினிக்கு வடிவேலுவின் மர்மப் போக்கை அறிய வேண்டும் என்ற ஆவல். ஒரு நாளைக்குக் கேட்டு விடலாம் என்ற முடிவுடன், தோட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு திரும்பி, கூடத்தின் விளக்கைப் போட்டாள்.

மறு நாள் காலை.

குளித்துவிட்டு வேறு ஆடைகளை அணிந்துகொண்டு, இரட்டைப் பின்னலை இழுத்துவிட்டபடி தன்னுடைய அறைக்குச் சென்றாள் ராகினி.

அன்று கிருஷ்ண ஜயந்தி. விசேஷமான நாள். வைரக்கல் பதித்த வளையல்களையும், நெக்லஸையும் மேஜை டிராயரில் வைத்திருந்தாள். அவைகளை அணிந்து கொள்ள மேஜை டிராயரைத் திறந்தபோது, அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

அவளுடைய வாய் திறந்தது திறந்தபடியே சிறிது நேரம் வரையில் நின்றுவிட்டது!

டிராயரில் அவள் சிறிது நேரத்திற்கு முன் வைத்துவிட்டுப் போன நகைகளைக் காணோம்!

மேஜையின் மீதிருந்த மைக்கூடு சாய்ந்து, மேஜையின் மேலேயும் கீழேயும் கொட்டியிருந்தது! அந்த அறை முழுவதும் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ரத்தினக் கம்பளத்தின் மீதும் கொஞ்சம் மை சிந்தியிருந்தது.

அவளுக்கு ஒரே நொடியில் விஷயம் புரிந்துவிட்டது. அவள் கூச்சல் போட வேண்டியதுதான் பாக்கி; அம்மா ஓடி வருவாள். அப்பா ஓடி வருவார். சமையல்காரன் வேலாயுதம் ஓடி வருவான். வடிவேலுவைப் பிடித்துப் போலீஸில் ஒப்படைப்பார்கள். அவன் இத்தனை நாட்கள் ஜன்னல் வழியாக எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததன் மர்மம் இன்றல்லவா தெரிகிறது?

வெளியேயிருந்து ஒருவரும் உள்ளே வரமுடியாது. அந்நியர் யார் வந்தாலும் டாமி குரைக்காமல் இருக்காதே!

வேலாயுதம் ஐந்து ஆண்டுகளாக வேலை பார்க்கிறான். அவன்மீது சந்தேகம் வரக் காரணம் இல்லை.

வடிவேலு?

அவனுடைய வேலைதான் அது!

ராகினி ஜன்னல் பக்கம் பார்த்தாள்.

வெளியே, தோட்டத்தில் ஒன்றும் அறியாதவன் போல் வாளியில் இருந்த தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான் வடிவேலு!

ராகினி, வேறு ஏதாவது காணாமல் போயிருக்கிறதா என்று கவனித்தாள். அவளுடைய சாக்லேட் டப்பாவைக் காணோம்! அதில் சில்லறைக் காசு போட்டு வைப்பாள். சில்லறைக் காசுகள் மட்டும், கீழே ஒரு பக்கத்தில் கொட்டப் பட்டிருந்தன.

ராகினிக்கு, அப்பாவிடம் சொன்னால் உடனே அவர் போலீஸைக் கூப்பிடுவார் என்று தெரியும். போலீஸாரைக் கூப்பிடுவதற்குள், வடிவேலுவை மிரட்டிப் பார்த்து விடலாம் என்று முடிவு கட்டிக்



மரப் பலகை சாக்லேட் டப்பாவின் அளவே இருந்தது! நகைகளைச் சாக்லேட் டப்பாவில் போட்டு எங்கேயோ வைத்திருக்கிறான் என்று நினைத்தாள். மரப்பலகை எதற்கு?

''என்ன உளறுகிறாய்?''

"உளரவில்லை. இன்னும் உனக்குப் புரியவில்லை. மைக்கூடு எப்படிச் சாய்ந்தது என்று வேலாயுதத்தைக் கேள்.''

அவள் ஆத்திரத்துடன் வேலாயுதத்தை இரைந்து கூப்பிட்டாள்.

அவன் ஓடி வந்தான்.

"என் மேஜை மேல் மைக்கூடு எப்படிச் சாய்ந்தது?''

வேலாயுதம் சொன்னான்:"சமையலறைக்குள் பூனை வந்தது. அதை விரட்டிய போது, உங்கள் அறைக்குள் ஓடியது. அப்போது அது உருட்டி விட்டிருக்கும். ஏன்?''

ராகினி கோபத்துடன் வடிவேலுவைப் பார்த்து உறுமினாள்:

"ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் உளறுதே! எங்கே என் நகைகள்? போலீஸைக் கூப்பிடட்டுமா?''

''கூப்பிடுங்கள்'' என்றான் வடிவேலு சாவதானமாக.

''நான் நினைத்தது நடந்து விட்டது; இந்தப் பயலின் முகத்தைப் பார்த்தவுடனே இவன் எப்படிப்பட்டவன் என்பதை நான் அறிந்துகொண்டேன். நான் சொன்னால் நீங்கள் கேட்பீர்களா? அதனால்தான் நான் பேசாமல் இருந்து விட்டேன்'' என்று கத்திப் பேசினான் வேலாயுதம்.

கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள்.

''வடிவேலு!''

அவன் நிமிர்ந்து பார்த்தான். அவன் முகத்தில் ஆச்சரியம் என்பது துளிக்கூட இல்லை. சாதாரணமாகவே காணப்பட்டான் அவன்.

''எங்கே என் நகைகள்?''

அவன் ஒன்றும் சொல்லவில்லை. மெல்ல நடந்து, ஜன்னலுக்குப் பக்கத்தில் சென்று, கீழே குனிந்து, நீண்ட சதுரமாக ஒரு சிறிய மரப் பலகையை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அவள் விழித்தாள்.

''என்ன இது?''

''உன்னுடைய சாக்லேட் டப்பா இந்த அளவுதானே இருந்தது?''

அவளுக்குப் பெரும் புதிராக இருந்தது. உண்மையில், அந்த

வடிவேலு ஒரு நிமிஷம் வேலாயுதத்தை விழுங்கி விடுபவனைப் போல் பார்த்தான். மறு நிமிஷம் பங்களாவுக்குள் ஓடினான்.

ராகினியும் வேலாயுதமும் அவனைத் தொடர்ந்தார்கள்.

ராகினியின் அறையில், மேஜையை இழுத்து ஒரு பக்கமாகப் போட்டான். மேஜை இருந்த இடத்தில், ரத்தினக் கம்பளத்தைச் சுருட்டினான்.

கீழே, அந்த அறை முழுவதும் மிருதுவான மரப்பலகை போடப் பட்டிருந்தது. நடக்கும்போது மரப் பலகை சத்தம் போடாமல் இருக்கவே ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட் டிருந்தது. கீழே ஓர் இடத்தில், சாக்லேட் டப்பா பதிந்து கிடந்தது. அதை அவன் எடுத்து ராகினியின் கையில் கொடுத்தான். வெட்டி எடுக்கப் பட்ட அந்த இடத்தில், ஜன்னல் ஓரமாகத் தோட்டத்திலிருந்து எடுத்த பலகைத் துண்டைப் போட்டு அடைத்தான். அது சரியாகப் பதிந்துவிட்டது.

''நகைகளைச் சாக்லேட் டப்பாவில் போட்டு இந்த இடத்தில் ஒளித்து வைத்தது வேலாயுதம். எல்லோருக்கும் என் மீதுதான் சந்தேகம் விழும் என்பது நிச்சயம். என்னைக் கொண்டுபோய் ஜயிலில் போட்டவுடன் சில நாட்கள் கழித்து, சாவதானமாகப் பெயர்த்துக்கொண்டு போய் விடலாம் என்று வேலாயுதம் திட்டம் போட்டான். அவன் மேஜையைத் தள்ளியபோது, மைக்கூடு கொட்டிக் கொண்டது. அதை அவன் அவசரம் அவசரமாகக் கையால் துடைத்தான். அவன் கையிலிருந்த மை சாக்லேட் டப்பாவில் அப்படியே ஒட்டிக்கொண் டிருக்கிறது, பாருங்கள். அவருடைய கை ரேகையை ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் கையை மட்டும் சோப்புப் போட்டுக் கழுவி விட்டார். எல்லாவற்றையும் நான் தற்செயலாக ஜன்னல் ஓரமாக மறைந்து நின்று கவனித்தேன். இன்னும் என்ன?'' என்றான் வடிவேலு.

வேலாயுதத்தின் முகம் பீதியையும் பயத்தையும் காட்டியது.

ராகினி அதைக் கவனித்து விட்டு வடிவேலுவைப் பார்த்து, ''சரி, வடிவேலு! நீ ஏன் அடிக்கடி ஜன்னல் வழியாகப் பார்க்கிறாய்? நீ அடிக்கடி மறைவில் நின்று என்னைப் பார்ப்பதை எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். அதற்குப் பதில் கூறு.''

''எனக்கு ஒரு தங்கை இருந்தாள். அவள் உன்னைப் போலவேயிருப்பாள். அவள், இரண்டு மாதங்களுக்கு முன் விஷ ஜுரத்தினால் இந்த உலகத்தை விட்டே மறைந்து விட்டாள். இதோ இதுதான் அவள் புகைப்படம்!'' என்று ஓர் உறையை எடுத்து நீட்டினான்.

அதை வாங்கிப் பிரித்துப் பார்த்ததும் ராகினியின் கண்களில் கண்ணீர் வருவதைப்போல் இருந்தது. அவள் அதை மறைக்க முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு, ''வேலாயுதம்! நீ அப்பாவிடம் வா. உன்னைப்பற்றி அவரே ஒரு முடிவு செய்யட்டும்!'' என்றாள்.

வேலாயுதம் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு அவள் பின்னால் நடந்தான்.



வடிவேலன்

கே. எஸ். பி.

சுற்றுப் புறக்கிராமங்களிலெல்லாம் ஒரு வாரமாக அதே பேச்சாக இருந்தது. பள்ளிக்கூடச் சிறுவர்கள் அனைவரும் வெயிலின் கடுமையை மறந்து அந்த விஷயத்தையே விவாதித்துக் கொண்டிருந்தனர். ஒரு டிராமா, சினிமா, ஸர்க்கஸ் எதுவும் பார்க்காத 'உம்மணா மூஞ்சி' அம்மாஞ்சிகூடச் சர்க்கஸை ஒருதரம் பார்த்துவிட்டு வந்தான்.

'மனோஹரா ஸர்க்கஸ் கம்பெனி' யின் பெயர்தான் ஒவ்வொருவர் வாயிலும் அரைபட்டுக்கொண்டிருந்தது. ஆனால் பாராட்டு அத்தனையும் ஸர்க்கஸ் முதலாளிக்கோ மானேஜருக்கோ அல்ல. அத்தனையும் பன்னிரண்டு வயதுச் சிறுவன் வடிவேலனுக்குத்தான்.

வடிவேலன்—பெயரை நினைத்த போதே அவன் சாகசங்கள் நினைவுக்கு வந்தன. அப்பப்பா, பன்னிரண்டு வயதுக்கு என்ன துணிவு, என்ன அநாயாசம்!

உறுமும் புலி வடிவேலனுக்கு அஞ்சும். சீறும் நாகம் வடிவேலனுக்கு முன் படமெடுத்து மகிழ்ச்சியோடு ஆடும். மற்றும் மனிதர்களை நடுக்க வைக்கும் மிருகங்கள் அத்தனையும் வடிவேலனுக்கு அலட்சியம்!

சர்க்கஸுக்குப் புகழ் அவனால் தான்! பாக்கிப் அத்தனை பேர்கள் 'பொம்மைகள்'—பெயருக்குத் தான்.

கால் சிராயோடும் வெள்ளை வெளேரென்ற பனியனோடும் வடிவேலன் பாருக்கு வந்துவிட்டால் கரகோஷந்தான். சிரமமின்றி மேலுக்குக் கீழும், பலகைக்குப் பலகையுமாகத் தாவுவான். பல் இடுக்கிலே கயிற்றைப் பிடித்துக் கொள்வான்—கீழே கயிற்று முனையை ஒருவன் தாங்கிக் கொண்டு ஊஞ்சலாடுவான்—வடிவேலன் பாரில் மேலுக்குத் தாவுவான். கீழே கயிற்றைப் பிடித்திருக்கும் ஆள் தானாகவே மேலே ஏறுவான். என்ன உறுதி அவன் பற்களுக்குத்தான்!

அடுத்தபடி சிங்கத்தோடு விளையாட்டு. பிடரி தொங்க, சிவந்த கண்களோடு பாய்ந்து வரும் சிங்கம் ஒரு நிமிஷம் குறுக்கே கோடு போட்ட இடத்தில் அப்படியே அசைவற்று நிற்கும்.

வடிவேலன் சாட்டையால் கீழே ஒரு தட்டுத் தட்டுவான். சிங்கம் வாயை 'ஆ'வென்று திறக்கும். திறந்த வாயில் நாலு தலைகள் நுழைய இடமிருக்கும். ஆனால் வடிவேலனின் தலை முதுகு வரைக்கும் உள்ளே போய்வரும். பின்பு ஒரு சாட்டையடி—திறந்த வாய் மூடும்! சிங்கம் நினைத்திருந்தால் தலையைத் துண்டித்திருக்க முடியாதா? அந்தச் சின்னஞ் சிறு உடலையே சின்ன பின்னமாக்கியிருக்க முடியாதா?

எல்லாம் பயிற்சிதான் என்று கூட்டத்துக்கு வந்தவர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

மற்றவர் இடித்துக் கூறுவார்: "பெரியவர்களுக்கே இந்தப் பயிற்சி வராதாக்கும். அவனுக்கு வயது பன்னிரண்டுதான்—இது தெய்வத்தின் அருளாக்கும்..!"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்—" வேதாந்த பரமாய் ஒருவர் பேசுவார்.

* * *

ஊர் ஹெட்மாஸ்டருக்கு நல்ல மதிப்பு உண்டு. அவருடைய மகன் கிருஷ்ணனோ போக்கிரித்தனத்துக்குப் பெயர்போனவன்! பதினான்கு வயதுக்கு மூன்றாவது பாரம் படித்துக்கொண்டிருந்தான். ஹெட்மாஸ்டரின் மகன் என்பதாலோ அல்லது வேறு காரணத்தாலோ எந்த வகுப்பிலும்

குறைந்த மார்க்குகள் வாங்கியும் அவனை நிறுத்தவில்லை. ஆனால் பொது விஷயங்களில் அசாத்திய அக்கறை காட்டிவந்தான்.

அன்று சாயங்காலம் ஊரிலே புறம்போக்கான ஓரிடத்திலே கிருஷ்ணனும் அவன் தோழர்களும் கூடினர். குறிப்பிட்ட நேரத்துக்குக் கிருஷ்ணன் ஆஜரானான்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்தது கிருஷ்ணன்தான். பேசப்பட்ட விஷயம் சர்க்கஸ் வடிவேலனைப் பற்றி. கிருஷ்ணன்தான் முதலில் ஆரம்பித்தான்.

''விஷயம் உங்களுக்குத் தெரியாது—நிதானமாக இதைக் கேளுங்கள்!

''வடிவேலன் சர்க்கஸுக்குத் தானாக வேலைக்கு வந்தவன் அல்லவாம். சர்க்கஸ் முதலாளி ஒருவர் இருக்கிறாரா, 'கரு கரு' என்று கோயில் யானையாட்டமா..!''

கூட்டத்தில் ''ஆமாம், ஆமாம்'' என்ற குரல்கள்!

''அவர் சர்க்கஸ் கம்பெனியை ஆரம்பித்த காலத்திலே ஆட்களே மிகக் குறைவு. கம்பெனிக்கும் யாரும் வரவில்லை. வேலை தெரிந்த சிலர் அதிகச் சம்பளம் கேட்டனர். முதலாளி திக்குமுக்காடினார்.

''ஒரு நாள் மாலை வழக்கம்போல எங்கோ சுற்றிவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாராம்.

''சாலையோரத்திலே ஒரு பையன் விக்கி விக்கி அழுது கொண்டிருந்தானாம். இவர் போய் விசாரித்தார்.

'''எனக்கு அப்பா இல்லே, அம்மா தான்..! இன்னிக்குப் பள்ளிக்கூடம் போகாததற்காக என்னை அடித்து விட்டாள்—இரவு உண்ணச் சோறும் இல்லையாம்.'

''முதலாளி உஷாரானார்; பையனின் அழகு பொருந்திய முகமும் நன்கு வளர்ந்த கைகால்களும் அவரை உறுத்தின.

'''சரி, என்னோடு வந்துவிடு..!'

'''சாப்பாட்டுக்கு....அப்புறம் அம்மாகிட்டே சொல்ல வேண்டாமா..?''

'''அம்மாகிட்டே சொல்லுவானேன்?' பையனை யாருக்கும் தெரியாமல் கடத்திக்கொண்டு வந்துவிட்டாராம். சர்க்கஸுக்கு வந்த பையன் ஆட்டங்களைப் பார்த்து ரசித்தான். உடனே தனக்கும் அவ்வாறு விளையாடிப் பழக வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. ஓய்வு நேரங்களில் ஆட்கள் அவனைப் பழக்கினார்கள். சர்க்கஸ் தீனி உடலை நன்கு வளர்த்தது. பெயரையே மாற்றி வடிவேலன் என்று வைத்துவிட்டார் அந்த முதலாளி—''

''அதனாலென்ன..?'' கூட்டத்தில் இப்படிச் சில குரல்கள்.

''அவசரப் படுகிறீர்களே! விஷயம் அறிந்த தாய் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டாள். தன் ஒரே செல்வத்தை அடித்து விரட்டிவிட்டோமே என்று தன்னையே நொந்து கொண்டாள். ஊரில் சில மனிதர்கள் சர்க்கஸ் முதலாளியிடம் போய் விஷயத்தைச் சொன்னார்கள். தாயும் நேரிலே போய்ப் பார்த்தாள்.

''பையனை அனுப்ப மறுத்ததோடு முதலாளி உரிமையும் கொண்டாடினார். பையனைத் தாய் பார்க்கவே அநுமதிக்கவில்லை. பையனுக்குத் தாய் வந்துபோவதே தெரியாது.

''ஊர் ஊராகச் சர்க்கஸ் கம்பெனி முகாம் போட ஆரம்பித்தது. வடிவேலனும் ஊரைவிட்டு ஊர் போய்க்கொண்டிருந்தான்.

மகனைப் பறி கொடுத்த அவள் சட்டப்படி மகனைப் பெற ஆள் பலமோ பணமோ இன்றித் தவிக்கிறாள். பையனுக்கோ சர்க்கஸில் கடுங்காவல்—எங்கும் தனியாகப் போகமுடியாது. தாய் வந்தால் இல்லையென்று சொல்லி அனுப்பி விடுவார்கள். தாய்ப் பாசத்தையே கொன்று விட்டனர் சர்க்கஸ் ஆட்கள்.''

''தாய்ப்பாசம் கொஞ்ச நஞ்சமா?'' என்று நண்பர்கள் ஆமோதித்தனர்.

''ஆகவே—'' என்று கனைத்தான் கிருஷ்ணன்.

''நாமும் நம் நண்பர்களும் வடிவேலனை எப்படியாவது சந்தித்து உண்மையைச் சொல்லி அவனை உணர்விக்க வேண்டும்; விஷயம் தெரிந்தால் அவன் மனம் சங்கடப்படும்; எப்படியாவது தாயை

அடைந்து விடுவான். அவன் போய் விட்டால் இந்தச் சர்க்கஸ் கம்பெனியும் போனாற் போலத் தான்..!''

''ஆம், ஆம்..!'' என்று நண்பர்கள் ஆமோதித்தனர்.

* * *

அன்று ஞாயிற்றுக்கிழமை. அதோடு அன்றுதான் சர்க்கஸ் கம்பெனி அந்த ஊரில் தங்கும் கடைசி நாள். கூட்டத்துக்குக் குறைச்சலேயில்லை. ஆண்களும் பெண்களுமாய்க் 'காலரி'யில் குழுமிவிட்டனர். தலைமயமாகக் கூடி நின்றது சர்க்கஸ் கூடாரம்.

பார் விளையாட்டுகள் ஆரம்பிக்கும் நேரம் நெருங்கி விட்டது. வடிவேலன் வந்தான். கூட்டத்தை ஒருமுறை பார்வையிட்டான். திடீரென்று அவன் கண்களிலே ஒரு மருட்சி—



''அந்த வாண்டுப் பயலே அப்போ இருந்து தேடுறேன். அகப்படமாட்டேங்கிறுனே!''

அடுத்த நிமிஷம் வழக்கம்போல் சர்க்கஸ் வேலைகளைத் தொடங்க ஆரம்பித்து விட்டான். இடையிடையே அவன் தொண்டை கமறியது. கண்கள் கலங்க ஆரம்பித்தன. பாரில் தலைகீழாக நிற்க முடியவில்லை. உடல் தள்ளாட, முகம் வேர்த்துக் கொட்டக் கீழே மரம்போல் சாய்ந்துவிட்டான்.

''வடிவேலனுக்கு ஏதோ ஆபத்து!'' என்று ஆட்கள் விரைந்தனர். அவனை அலாக்காக உள்ளே தூக்கி வந்தனர். போகும்போது அவன் கண்கள் கூட்டத்தை ஒரு முறை பார்த்தன. அதில் யார் மேலோ அவன் திருஷ்டி நிலைத்து நின்றது மாத்திரம் தெரிந்தது!

''இன்று வடிவேலனின் உடல் நலமின்மையால் வேறு சில ஆட்டங்களை மற்ற ஆட்டக்காரர்கள் ஆடிக் காட்டுவார்கள்..!'' என்ற சர்க்கஸ் அறிவிப்பு 'மைக்' மூலம் வந்தது. வந்திருந்தவர்களில் பாதிப் பேர்கள் அப்போதே உதட்டைப் பிதுக்கினர்.

''இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது!'' என்று சிலர் பேசிக் கொண்டனர்.

டாக்டர் வடிவேலனைப் பற்றி விசாரித்தார்.

''இவன் சமீபத்தில் யாரையாவது பார்த்தது உண்டா?''

''ஊஹூம்..!''—முதலாளி.

டாக்டர் ஜாடையாக அவன் தாய் அங்கே வந்து போவது உண்டா என்று வினவினர்.

''இல்லையே..அவளை இங்கே அநுமதிப்பதே இல்லை. இவன் அவளைப் பார்த்ததே யில்லையே.. அப்படிக் கட்டுப்பாடு..!''

''கட்டுப்பாடு சரி..!''—டாக்டர் சிரித்தார்.

''அவன் ஆஸ்பத்திரியில் இருப்பது நலம்'' என்று சொல்லிப் போய் விட்டார் டாக்டர்.

வடிவேலன் மயக்கமுற்ற நிலையிலேயே இருந்தான். சதா சொல்ல முடியாத ஓர் உருவத்தைப் பற்றிய நினைவு மனத்தில் எழுந்தது. மாலையில் பார்த்தவுடனே எப்படி அவளைத் தெரிந்து கொண்டான்? எட்டு வருஷங்களிலே அவள் முகம் துளிக்கூட மாறவில்லையே! அவளை அவன் எப்படிச் சந்திப்பது? ஹெட் மாஸ்டர் மகன் கிருஷ்ணன் ஒரு நாள் காதில் போட்டதைத் திடீரென்று ஞாபகப்படுத்திக்கொண்டான்.

* * *

விளையாட்டுப்போல ஒரு வாரம் ஆகிவிட்டது. அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்த பிறகே சர்க்கஸின் வருமானம் படுத்து விட்டது. முதலாளி கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

''இவன் அம்மாவைப் பார்க்கும்படி யாராவது உள்ளே விட்டு விட்டீர்களா..?'' என்று ஆட்களைத் துருவித் துருவிக் கேட்டார்.

''ஊஹூம். அவள் ஏன் முப்பது மைலுக்கப்பாலுள்ள கிராமத்திலிருந்து இங்கு வருகிறுள்..?''

முதலாளி முதலில் சர்க்கஸ் கம்பெனியை அந்த ஊரைவிட்டு மாற்ற ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார்.

சர்க்கஸ் ஊரை விட்டுப் போகும் தினம். வடிவேலனின் உடல் சற்றுக் குணமடைந்திருந்தது.

* * *

உள்ளே வடிவேலனைப் படுக்க வைத்துக் காற்று வர விசிறினர்

கள். வடிவேலன் கூடியிருந்தவர்களை மருண்ட பார்வையோடு பார்த்தான். அவன் கண்கள் மாத்திரம் எங்கோ நிலைத்து நோக்கின. அவன் விரும்பிய உருவம் இப்போது அங்கிருந்து நகர்ந்து விட்டதோ?

''யாரைத் தேடுகிறாய் வேலு?'' என்று பரிவோடு கேட்டார் சர்க்கஸ் மானேஜர்.

பேச நா எழவில்லை. அவனுக்கு எல்லாம் ஒரே நினைவுதான். வார்த்தைகள் குழறின. அருவி போல் கண்களிலிருந்து நீர் பெருகியது.

''யாரோ என்னமோ செய்து விட்டார்கள்..சூது இருக்கிறது இதில்..!'' என்றார்கள் சர்க்கஸ் ஆட்கள்.

கூடாரத்தைத் தூக்கியபோது ஒரு குடிசை ஆடியது. சர்க்கஸ் ஆட்கள் பயந்து உள்ளே சென்றனர்.

அங்கே துயரே வடிவாய் நடுத்தர வயதுள்ள ஒருத்தி படுத்திருந்தாள். அவளுக்குத் துணை அந்த ஊர் ஹெட்மாஸ்டரின் மகனும் அவன் தோழர்களும். சர்க்கஸை ஒட்டிக் குடிசை. குடிசையையும் கூடாரத்தையும் சேர்த்து ஆணி அடித்திருந்தது. பின்பக்கத்தில் அமைந்திருந்த குடிசையை ஆட்கள் யாரும் கவனிக்கவில்லை. ஒரு வாரமாய் ஆஸ்பத்திரிக்குப் போய் வரவே அவர்களுக்கு நேரம் சரியாக இருந்ததே!

சர்க்கஸ் ஆட்கள் நுழைந்த போது உள்ளே ஒரு பெண்ணின் குரல் தீனமாகக் கேட்டது.

''அவன் உடல் தேவலையா கிருஷ்ணு..!''

''பரவாயில்லையம்மா..நேற்று ஆகாரம் சாப்பிட்டான்..உங்களைப் பார்த்தால் முழுப்பலமும் வந்து விடும்.!''

ஆட்கள் ஆணியடித்தாற்போல நின்றுவிட்டனர். யார் இந்த அம்மாள்? வடிவேலனைப் பற்றிப் பேசுவானேன்?

விஷயம் மானேஜருக்கு எட்டியது; முதலாளி காதில் விழுந்தது. செய்தி கேட்ட முதலாளி புதிதாக எழும்பிய குடிசைக்கு விரைந்து

வாத்தியார்: வாயில்லா ஜீவன் ஒன்றைச் சொல், பார்ப்போம்!

பையன்: ஊமை சார்!

வந்தார். அவர் வந்தபோது குடிசையினுள்ளே ஏகப்பட்ட பேர் குழுமி விட்டனர்—அந்தச் சர்க்கிள் போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் உள்பட!

முதலாளிக்குத் துடைநடுக்கம்!

''வாருங்கள், உங்களைத் தேடித் தான் வந்தோம்..!'' என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''என்ன..எ..ன்..ன?''

வடிவேலனின் தாய் எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

''எட்டு வருஷமாயிற்று என் மகன் என் கையை விட்டுப் போய்..!''

ஹெட்மாஸ்டரும் ஊரும் பஞ்சாயத்துக் கூடிப் போலீசோடு விவாதித்தனர்— எல்லாம் கிருஷ்ணனின் முன்னேற்பாடுதான்!

சர்க்கஸ் முதலாளி கைதானார்— பையனைக் கடத்திச்சென்றதற்காக!

வடிவேலனைப் பார்க்க அவன் தாயை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். மற்றவர்களைப் பற்றி என்ன வேண்டியிருக்கிறது? குடிசை எழும்பிய மர்மம் கிருஷ்ணனுக்கும் அவன் சகாக்களுக்கும் தான் தெரியும்!

தழும்பு

ஜே.எம்.சாலி

கண்ணாடியில் முகத்தைப் பார்த்தேன். வனப்பைக் கெடுக்கும் வண்ணம் ஏழெட்டுத் தழும்புகள் வதனத்தில் நிரம்பி நின்றன. அந்தத் தழும்புகள் என்னைப் பார்த்துப் புன்னகை புரிவதாக உணர்ந்தேன். உள்ளமும் பூரிப்பால் சிரித்தது.

நேரத்தை நோக்கினேன். மூன்று மணியாகப் போவதை கடிகாரம் உணர்த்தியது. தலையை வாரிக்கொண்டு ஆனந்தம் அலைபாய வெளியே கிளம்பினேன். பஸ் ஸ்டாப்பை நோக்கிக் கால்கள் விரைந்தன. கன்னத்தை மெல்ல வருடிப் பார்த்தேன். அன்பெனும் தைலத்தால் ஆற்றப்பட்ட தழும்புகளல்லவா அங்கே நிறைந்திருக்கின்றன!

சாவதானமாக ஓடிக்கொண்டிருக்கும் ஆறு; இரு மருங்கிலும் இயற்கையின் பசுமைக் கோலம்; ஆற்றின் கரையில் பிள்ளையார் கோயில்; கரையின் புறத்தே பஸ் ஸ்டாப்; சற்றுத் தூரத்தில் கடைத்தெரு. சதா மென் காற்றைத் தவழ விட்டவாறு நிற்கும் நாலைந்து வேப்ப மரங்கள். பக்கத்தில் இரண்டு மூன்று சிமெண்ட் பெஞ்சுகள். இத்தகைய சூழ் நிலையிடையே அமைந்திருக்கும் எங்களூர் பஸ் ஸ்டாப்பில் நாள் முழுதும் உட்கார்ந்திருக்கலாம். இதமான நிழலும் குளுமையும் அங்கே கொப்புளிக்கும்.

வேப்பம்பூ மணம் காற்றில் வந்தது. அதனை நுகர்ந்த வண்ணம் பெஞ்சு ஒன்றில் அமர்ந்தேன். பஸ்ஸுக்காகக் காத்து நின்ற இரண்டு மூன்று பேர்கள் வேப்பமரத்தடியில் கூடி வீணான பேச்சை வளர்த்திக்கொண்டிருந்தனர். ஆற்றின்மீது என் பார்வை பதிந்தது. ஆழ்கடலோடு சங்கமமாகப் போகிறோம் என்ற குறிக்கோளோடு அது இடையின்றி ஓடிக்கொண்டிருக்கிறது. என்றாலும் அதனிடையே எத்தனை சுழல்கள்! சுழற்சிகள்! வேகமான சுழியொன்று என் கவனத்தைப் பறித்தது.

மறுகணம்....அந்தச் சுழியின் விசையைக் காட்டிலும் என் சிந்தனை கட்டவிழ்ந்தது? அதி வேகமாகச் சுற்றிச் சுழன்றது. அந்தச் சுழற்சியிலே ஜோஸப் தோன்றினான்! ஆம்! நானும் ஜோஸப்பும் நான்கைந்து வருஷங்களுக்கு முன், நீச்சலடித்து இரண்டு படுத்திய ஆறு இதுதான். அசுர விசையோடு தோன்றும் எத்தனையோ சுழிகளையெல்லாம் நாங்கள் வென்றிருக்கிறோம். ஒன்றாகக் குதித்து எதிர் நீச்சல் போட்ட அந்த இன்ப நாட்களை எப்படி மறக்க முடியும்?

சின்ன வயசு அப்பொழுது. பயிரும் பசுமையுமாக நாங்கள் வளர்ந்தோம். பள்ளிக்கூடத்திலே, விளையாட்டு மைதானத்திலே, மற்ற இடங்களிலே நாங்கள்

ஒன்றுபட்டுத்தான் இருப்போம். ஒன்றி நின்ற எங்கள் உள்ளங்களை யாராலும் பிரிக்க முடியவில்லை.

இத்தனைக்கும் ஜோஸப் எங்கள் ஊரில் பிறந்தவன் அல்ல. அவனுக்குச் சொந்த ஊரும் இது இல்லை. அன்றியும் அவன் கிறிஸ்துவச் சிறுவன்; ஆனால் நானோ....?

ஒரு நாள் இந்த ஆற்றங்கரையில், இதே இடத்தில் நின்று கொண்டிருக்கும் போதுதான் எங்கள் சந்திப்பு ஏற்பட்டது. பஸ் நின்றது. அதிலிருந்து குதூகலத்தோடு அவன் குதித்தான். கூடவே தாயும் தந்தையும் இறங்கினர். நான் அவனைப் பார்த்தேன்; என்னை அவன் நோக்கினான், புன்னகை எங்கள் முகங்களிலே மின்னியது.

அவனது வட்ட முகத்தைவிட்டு அகல என் கண்கள் ஏனோ மறுத்தன. நல்ல சிவப்பு நிறம்; தக்காளிப் பழ நிறத்தில் கன்னங்கள் தகதகத்தன. பேச்சில்லாத இது தான் எங்கள் முதல் சந்திப்பு!

பிறகுதான் எனக்கு விஷயம் விளங்கியது. அவர்கள் பாண்டிச்சேரியிலிருந்து வந்திருந்தார்கள். அவன் - ஜோஸப் - அப்பாவுக்கு எங்கள் வட்டாரத்தில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் உத்தியோகம். என் அப்பாவும் ஒரு ஆபீஸரான படியால் ஜோஸப்பின் அப்பாவுக்கும் இவருக்கும் சிநேகம் ஏற்படச் செய்தது. அப்புறம் எங்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

ஜோஸப் என் வகுப்பிலேயே படிக்கச் சேர்ந்தான். இடைவிடாது என்னிடம் பேச வருவான். "கணேஷ்....கணேஷ்..." என்று என்மீது உயிரையே விடுவான். நானும் அப்படித்தான்.

பேதம் கற்பிக்கும் பிழையான பழக்கம் பெரியவர்களால் ஏற்படுத்தப்படுவதுதான். வேற்றுமைக்கும், உயர்வு தாழ்வுக்கும் பிஞ்சு நெஞ்சங்களிலே இடமேது? நாங்கள் பழகினோம்; அன்புக்கு எதிராக நின்ற அனைத்தையும் அகற்றி எறிந்தோம். என் அம்மாவுக்கு மட்டும் இதில் சற்று வெறுப்பு இருக்கவே செய்தது. எங்கள் நட்புக்கு இடையூறாக அப்பா ஒரு போதும் நிற்கவில்லை. புதுப் பழக்கம் கூடாது என்று அம்மா பலமுறை இலேசாகக் கண்டித்திருக்கிறாள். என்றாலும் எனக்கென்ன? ஒரு கிளைப் பறவையாக நாங்கள் சிறகடித்துப் பறக்கத் தொடங்கிய பின்னர் யார் என்ன செய்ய முடியும்?

ஆற்றையொட்டிய கொய்யா மரக் கூட்டமும், மாஞ் சாரிகளும் எங்கள் பார்வைக்குக் கீழ்ப்பட்டவைகள்தாம். ஜோஸப் லாகவமாக மரத்தில் தாவுவான். மரத்திற்கும் தரைக்கு மிடையே கல் பறக்கும். காயும் கனியும் கீழே உதிரும். பிள்ளையார் கோயில் படித்துறைப் பக்கத்தில் உட்கார்ந்து, நாங்கள் அவற்றை ருசிக்கும்போது பெருமிதம் பொங்கும்; பூரிப்புச் சிரித்தாடும்!

ஜோஸப் வீட்டாரும் என்னிடம் ஆசைகொண் டிருந்தனர்; அன்பு காட்டினர்; பரிவைப் பெருக்கினர். இப்படியாக நாட்கள் நகர்ந்தன.

இன்பம் எப்பொழுதும் நிலைத்து நிற்பதில்லையே! இன்பத்திற்கு ஓர் எல்லை காணும்போது துன்பம் தானே தெரிகிறது!

ஞாயிற்றுக்கிழமை. சோம்பல் முறித்துக்கொண்டு ஏழு மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்தேன். ஜோஸப்பை இரண்டு நாட்களாகப் பார்க்காத குறை என்னை வருத்தியது. அவன் பள்ளிக்கூடத்திற்கும் வரவில்லை. என்ன காரணத்தினாலோ நானும் அவர்கள் வீட்டிற்குப் போய்ப் பார்க்கத் தவறி விட்டேன்.

எத்தனையோ நாட்கள் உயிருக்கு உயிராகப் பழகி யிருக்கிறோம். ஏனோ இப்பொழுது அதுவும் இரண்டு தினங்களாக எங்கள் முகங்கள் சந்திக்கவில்லை. ஜோஸப்பைப் பார்க்க வேண்டும் என்ற துடி துடிப்பு நெஞ்சிலே விரவியது.

ஒன்பது மணி யிருக்கும். ஜோஸப்பைப் பார்க்கப் போகலாம் என மெல்ல அடியெடுத்து வைத்தேன். போர்ட்டிகோவைக் கூட எட்டிப் பார்க்கவில்லை.... அதற்குள் அப்பா அழைத்தார்;

ஞாயிற்றுக்கிழமை யாகையால் அவருக்கு ஆபீஸ் இல்லை. என்னவோ ஏதோ என்ற அச்சத்தோடு அருகே போனேன்; அமைதியாக நின்றிருந்தேன்.

''எங்கேடா கிளம்புகிறாய்?'' முதற் கேள்வியைக் கேட்டு வைத்தார்.

''எங்கேயும் இல்லேப்பா..''

''பிரமாதமா வெளியே புறப்பட்டப்புறம், என்னடா பொய் சொல்ல வேண்டியிருக்கு? அந்த ஜோஸப் வீட்டுக்குத்தானே..?''

சற்று அழுத்தமாகவே அப்பா வினவினார். அப்பாவா இப்படிக் கேட்கிறார் என ஐயுற்றேன். பொய் சொல்லத் துணியவில்லை.

''ஆமாம், அங்கேதான் போகலாமென்று....'' பேசி முடிக்கவில்லை.

அவர் முகம் மாறியது. கண்களில் என்னவோ போல் ஒருவித மருட்சி! என்னிடம் அப்பா எப்போதும் உக்கிரமாக நடந்து கொள்வதில்லை. ஏனெனில், நான் அவருக்கு ஒரே குழந்தை. ஆனால் இன்று என்ன வந்துவிட்டது?

''அந்த வீட்டுப் பக்கம் பத்து நாளைக்கு அடியெடுத்துக்கூட வைக்கக்கூடாது. ஊருக்குப் போயிருக்கும் ஜோஸப் திரும்பி வருவதற்குள், அங்கே நீ போனதாகத் தெரிந்தால்....''

அப்பா நீட்டி முழக்கினார். நான் திகைத்து நின்றேன். இப்படி ஒரு கட்டளை பிறக்கும் என்று நான் கனவில்கூட நினைத்ததில்லையே!

'அவன் வீட்டுக்குப் போகக் கூடாதாம்! போனால் என்ன வந்து விடும்? ஏன் போகக் கூடாது?' என் மனம் துடித்தது. குழந்தையின் கருத்திலிருந்து ஒரு பொருளை மறைக்க முயலும்போது, அந்தப் பொருளை அடையத்தானே அது நாடுகிறது? நானும் அந்த நிலையில் தானிருந்தேன்.

கண்ணிலும் நல்லவனாக நான் கருதும் ஜோஸப்பைக் காண முடியாது. என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் அவன் கண்டிப்பாக ஊருக்குப் போக மாட்டான். அப்பா பொய் பேசுகிறார்; அன்பை அழிக்க முற்படுகிறார். இப்படிச் சிந்தித்தேன் நான்.

காலை முழுதும் வீட்டில் அடங்கிக் கிடந்தேன், அப்பா காவலுக்கு இருந்தமையால். நெஞ்சு பொறுக்கவில்லை. வானை மறந்த பயிரை எங்கே காண முடியும்?

பகல் சாப்பாட்டுக்குப் பிறகு, அப்பா குட்டித் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார், அம்மா அடுக்களைப் பக்கம் ஏதோ அலுவலாக இருந்தாள். இதுவே நல்ல சமயமெனப் பட்டது. மெல்லக் கிளம்பினேன். அன்பு அலறியது. ஆசை பிடரியைப் பிடித்துத் தள்ளியது. ஜோஸப்பின் இல்லம் நோக்கி ஓடினேன்!

கதவைத் திறந்தேன். உள்ளே நுழைந்தேன்; நிச்சப்தம் நிலவியிருந்தது. கண்களைச் சுழல விட்டேன். அன்னை மேரியின் உருவப் படத்தைச் சுவரில் கண்டேன். அருகே, அன்பின் உருவாக அவதரித்து, அன்பை நிலவ விட்டு மறைந்த உத்தமர் இயேசுவின் படம் இருந்தது.

''ஜோஸப்....'' கண்டத்திலிருந்து குரல் எழும்பியது. பதிலைக் காணோம், முனகலோசை மெதுவாகக் கேட்டது. கூடத்துப் பக்கம் பார்த்தேன். முகத்தை வேறு பக்கம் திருப்பியவாறு முடங்கிக் கிடந்தான் ஜோஸப். ஊரில் இல்லையென்று அப்பா சொன்னாரே, அதே ஜோஸப்தான்! தன்னந்தனியாக அவன் ஏன் படுத்திருக்க வேண்டும்? பிரமிப்பு மேலிட நெருங்கினேன்.

''உடம்புக்கென்ன ஜோஸப்? ஏன் இப்படி யிருக்கிறாய்?''

என் பக்கம் புரண்டான். மூடியிருந்த அவன் கண்கள் மெல்ல விரிந்தன. முகத்தைப் பார்த்த நான் பீதியால் அஞ்சி, நடுங்கி, ஒடுங்கிப் போனேன்! நெஞ்சு திக்கென்றது.

ஜோஸப்பின் எழில் முகமா அது? என் நண்பன் ஜோஸப்பா அவன்? நான் எப்படி நம்புவேன்? அவனது ஆப்பிள் கன்னங்கள் எங்கே? சப்பாத்திப் பழ நிறத்தில் அல்லவா முகம் மாறி விட்டிருக்கிறது! இத்தனை வடுக்களும்

கோரமும் அவனிடம் எப்படி வந்து சேர்ந்தன? விம்மினேன்.

''கணேஷ்...... இங்கே எதற்காக வந்தாய்? என்னைப் பார்க்காதே. இங்கே நிற்காதே'' தட்டுத் தடுமாறித்தான் அவனால் பேச முடிந்தது.

''ஜோஸப்..நீயா இப்படிப் பேசுகிருய்? மன மறிந்துதான் என்னைப் போகச் சொல்லுகிருயா?'' பதற்றத்தோடு கேட்டேன்.

''ஆமாம் கணேஷ்! என் முகத்தைப் பார்க்க உனக்குப் பிடிக்கிறதா? கோரம் தாண்டவமாடும் இந்த முகத்தைப் பார்க்காதே! போய் விடு....''

''ஒன்றிய நம் உள்ளங்கள் கன்றிப் போகத்தான் வேண்டுமா. ஜோஸப்? அன்பைச் சுட்டுப் பொசுக்கி விடுவதுதான் உன் எண்ணமா?''

''தவருகப் பேசாதே கணேஷ்! கொடுமையான அம்மை நோய்க்குப் பலியாகிக் கிடக்கிறேன். கர்த்தர் காப்பாற்றுவார்! நம் அன்பு அழியாதது. கணநேரமும் இங்கே நிற்காதே, கணேஷ்..''

எப்படியோ அவன் பேசி விட்டான். ஆதுரத்தோடு அவனை மீண்டும் பார்த்தேன். எங்கள் விழிகள் கண்ணீர் சொரிந்தன.

அடுத்த நிமிஷம் வெளியே வந்தேன். அப்பாவை நினைத்தேன். வீட்டில் நுழைந்தவுடன் அமோகமான அர்ச்சனை கிடைக்கும். என்ருலும் மாசற்ற எங்கள் அன்புக்கு மத்தியில் அப்பா கொடுக்கும் அர்ச்சனைதான் பெரிதா? துணிவோடு வீட்டுக்குப் போனேன்.

அம்மாவின் முகம் கடுகடுவென மாறியிருந்தது. அப்பா ஆரவாரித்தார். சின்னஞ் சிறு களேபரம் நடந்தது. ஓய்ந்ததற்கப்புறம் எச்சரிக்கை கொடுத்தனர், மீண்டும் இப்படி நடக்கக் கூடாதென்று!

இரவு, படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். பாழும் தூக்கம் வந்தால்தானே? அந்த வதனம்-ஜோஸப்பின் கோரத் தோற்றம் - என்னுள்ளே அலைக் கழித்துக்கொண்டிருந்தது. ஒருவாருகக் கண்கள் மூடிக்கொண்டன.

காலையில் எழுந்திருக்க என்னதான் முயன்றும் முடியவில்லை. இரவு முழுவதும் கனவுகள். ஒரு விதமான தளர்ச்சி! உடம்பு கொஞ்சம் கொதித்தது.

''இன்னும் எழுந்திருக்கவில்லையா, கணேஷ்?'' - என் பக்கம்

ஆறுமுகம்

தலைகீழாகப் பார்

வந்தாள் அன்னை. எழுந்து உட்கார்ந்தேன்.

"ஏண்டா ஒரு மாதிரியாக இருக்கே?" என்றவாறு உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். ஐந்து நிமிஷத்திற்குள் விஷயம் பிரமாதப்பட்டது.

அன்று மாலை. உடம்பிலே ஓர் எரிச்சல்! ஜுரம் நெருப்பாகத் தீய்த்தது. கலங்கி விட்டாள் அன்னை. எதிர் வீட்டுப் பாட்டி வந்தாள்.

"குழந்தைக்கு அதுதான் வந்திருக்கிறது. ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" இதைத் தான் அவள் சொன்னாள்.

"நன்மைக்குத்தானே நான் சொன்னேன். கேட்டானா தடியன்! அங்கே ஏன் போகவேண்டும்? இப்பொழுது கஷ்டப்படப் போவது யார்?" என் தந்தை துடித்தார்.

நான் புரிந்துகொண்டு விட்டேன். மறுநாள் என் தேகத்திலும் முகத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொப்புளங்கள். அம்மை என்னையும் பிடித்துக்கொண்டு விட்டது. வைசூரியின் கொடும் பிடிக்குக் கீழ் வாடத் தொடங்கினேன். சதா ஜோஸப்பின் நினைவுதான் நின்றது.

பத்து நாட்கள் ஓடிவிட்டன. உடம்பு சற்றுத் தேறி விட்டிருந்தது. அடுத்த நாள் தலைக்குத் தண்ணீர் விட்டார்கள். வடுக்கள் அநேகமாக மறைந்து விட்டன. முகத்தில் மாத்திரம் சில தழும்புகள்;

ஓய்வாக உட்கார்ந்திருந்தேன். வெளியே போய்விட்டு வந்த அப்பா, "அந்த இன்ஸ்பெக்டர் தம் ஊருக்கு இன்று காலையில் தாம் போகிறார். அவர் பையனுக்கு உடல் ரொம்பப் பலவீனமாம்" என்று கூறினார். திடுக்கிட்டேன்! இந்தச் செய்தி எனக்கு எவ்வளவு வேதனையளிக்கும் என்பதை அவர் எப்படி உணர முடியும்? ஜோஸப்பைக் காணலாம் என ஆசை மேலிட இருக்கும் வேளையில் இப்படியா விபரீதம் நடக்க வேண்டும்? என் ஆசை நசித்து விட்டது.

சந்தர்ப்பமும் சூழ்நிலையும் எங்களைச் சந்திக்க முடியாமல் தடுத்து விட்டன. நாட்கள் ஓடி விட்டன. இதயங்களிலே நிரம்பியிருக்கும் எல்லையற்ற அன்பு எப்படி மாறமுடியும்; ஜோஸப் கடிதம் எழுதினான். பதில் எழுதினேன். நான்கு கடிதங்கள் எங்களிடையே பறந்தன. ஆழ்ந்த நட்பின் அருமையை அம்மா பிறகுதான் உணர்ந்தாள். அந்த ஜோஸப்பைத் தான் இப்போது இன்னும் சற்று நேரத்தில் காணப்போகிறேன்.

வேப்பமரத்தடியில் நின்றவர்களின் வேகமான பேச்சு என் சிந்தனை யோட்டத்தைத் தடைப்படுத்தியது. பேச்சு இன்னும் அடங்கின பாடில்லை. வேம்புக் காற்று குளுமையாக வீசியது. அமைதியான நீரோட்டம் ஆற்றில் இருந்தது. எட்டத்தில் பஸ் வரும் ஓசை கேட்டது. கிழக்கே திரும்பிப் பார்த்தேன். சிவப்பு சிறிக் கொண்டு வந்தது. ஆமாம் 'ராம விலாஸ்' தான் வருகிறது.

பஸ் வந்துவிட்டது. ஜோஸப் இறங்கிவிட்டான். கரத்தைப் பற்றிக் குலுக்கினேன். என் ஜோஸப் செழுமையாக வளர்ந்து விட்டானே!

அந்த முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். தழும்புகள் அங்கும் இருக்கத்தான் செய்தன. கன்னங்குழிய மின்னிய மென்னகைத் தழும்புகளை எங்கள் அன்பின் அறிகுறியை - மறைத்து நின்றது. நாங்கள் நடந்தோம்.

துரோகத்தின் முடிவு

அ. வெ. சுப்பராயன்

"மன்னர் ஆட்சியை ஒழித்தே தீரவேண்டும். ஜனநாயக ஆட்சி காட்டில் மலரவேண்டும். இதுவே என் கோரிக்கை" என்று கூறி முடித்தது யானை.

"மன்னர் ஆட்சியை மட்டுமல்ல; மன்னரையும் ஒழித்தே தீரவேண்டும். மன்னரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டாலும் மறுபடியும் அவர் அப்பதவியை அடைய எவ்விதமாயினும் முயற்சி செய்தே தீருவார்! ஆதலால் மன்னர் பரம்பரையே ஒழிக்கப்பட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தது புலி.

கூட்டத்தில் சிறிது நேரம் பலத்த விவாதம் நடந்தது. மன்னர் பதவியை ஒழிப்பதா, மன்னரையே ஒழிப்பதா என்ற சர்ச்சையால் கூட்டம் இரு பிரிவாகப் பிரிந்தது. அவர்களிடையே காரசாரமான பேச்சுகள் நடைபெற்றன.

"இரண்டு தீர்மானத்தையும் ஓட்டுக்கு விட்டு முடிவு செய்வோம்!" என்றார் தலைமை வகித்த கரடியார்.

ஓட்டெடுப்பு நடைபெற்றது. யானையின் தீர்மானத்திற்கே அதிக ஓட்டுகள் கிடைத்தன. கடைசியில் யானையார் தம் தீர்மானத்தை விளக்கிக் கூறினார்.

"அநாதி காலமாய், காடுகளும் மிருகங்களும் ஏற்பட்டதிலிருந்து சிங்க ராஜனே மிருகேந்திரனாக இருந்து வந்திருக்கிறார். மிருகேந்திர பதவி அவர்களின் பரம்பரைச் சொத்து அல்ல. சந்தர்ப்பம் கிடைத்தால் நமக்கும் அந்தப் பதவி வகிக்கத் தெரியும். ஆனால் நாம் அதை விரும்பவில்லை. காலம் மாறிக்கொண்டு வருகிறது. உலகில் எங்கும் மன்னராட்சி ஒழிக்கப்பட்டுவிட்டது. நமது காட்டில் தான் அது இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இனி அது நீடிக்கக் காரணமில்லை. நமக்கு மன்னராட்சிதான் பிடிக்கவில்லையே தவிர மன்னரைப் பிடிக்கவில்லை என்பதல்ல. ஆதலால் நாம் மன்னராட்சியை ஒழிக்கப் பாடுபடுவோம். மன்னர் பரம்பரையாக ஆண்டு வருகிறார். அவர் லேசில் பதவியைத் துறக்கமாட்டார். நாம் தான் அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும். அதற்கு யாரேனும் தகுந்த முறையில் யோசனை கூறினால் ஏற்றுக்கொள்ளப்படும்."

"மன்னர் பதவியிலிருந்து விலக்கப்பட்டவுடன் அவர் சும்மா இருப்பாரா? நம்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளவும் இழந்த பதவியை மீண்டும் பெறவும் ஏதேனும் சூழ்ச்சி செய்ய முயல்வார். ஆகையால் அவர் கொஞ்ச நாள் சிறையில் வைக்கப்படவேண்டும். அதுதான் பந்தோபஸ்துக்கு நல்லது" என்றது ஒட்டகம்.

"அதுவும் சரிதான்" என்று ஒத்துக்கொண்டது யானை.

வெகுகாலம் அயல் நாடுகளில் திரிந்துவிட்டு வந்த குரங்கார் ஒரு யோசனை கூறினார்.

"மன்னரைப் பிடித்துச் சிறையிட வேண்டுமானால் நாம் எல்லோரும் திடீரென்று படையெடுத்து அவரைக் கைது செய்யவேண்டும். இது ஒரு வழி. எனக்கு மற்றொரு வழி தோன்றுகிறது. எனக்குத் தெரிந்த சர்க்கஸ் கம்பெனி ஒன்று இருக்கிறது. அதற்கு ஒரு சிங்கம் தேவை. நான் அந்தக் கம்பெனியாரிடம் ஒரு வார்த்தை கூறிவிடுகிறேன். அவர்கள் வெகு சுலபமாகச் சிங்கத்தைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். நமக்குச் சிரமமில்லாமல் காரியமும் ஆகும். மன்னரையும் சிறைப் பிடித்தமாதிரி ஆகும். பிறகு அவர் நமக்கு எந்தவிதத் தீங்கும் நினைக்க இடமே இருக்காது."

கூட்டத்தில் எல்லோரும் குரங்கின் யோசனையை ஒருமனதாக ஏற்றுக்கொண்டார்கள். அதனால் மன்னர் பதவி நீக்கும் படலம் குரங்காரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குரங்கு அயல் நாடுகளில் பிரயாணம் செய்து அநுபவப்பட்டது. ஆதலால் அதற்குக் காட்டிலே நல்ல செல்வாக்கு இருந்து வந்தது. அயல் நாடு சென்றது என்றால் ஒரு சர்க்கஸ் கம்பெனி மூலமே. நெடு நாட்களாக இந்தக் குரங்கு ஒரு சர்க்கஸ் கம்பெனியில் இருந்து வந்தது. அவர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் குரங்கும் அழைத்துச் செல்லப்பட்டது. இந்தக் குரங்கின் வேடிக்கையைப் பார்ப்பதற்கென்றே சர்க்கஸில் ஒரு பெருங்கூட்டம் கூடும். அதனால் அதற்குச் சர்க்கஸில் நல்ல தீனி கொடுத்து வந்தார்கள். அவ்விதம் இருக்கும்போது அதற்கு அந்தக் கூத்தாடி வாழ்க்கை பிடிக்கவில்லை. காட்டில் சென்று சுதந்தரமாய் வாசம் செய்ய வேண்டும்போல் தோன்றவே ஒரு நாள் பிய்த்துக் கொண்டு வந்துவிட்டது.

ஆனால் காட்டுக்கு வந்த பிறகு அதற்குக் காடு பிடிக்கவில்லை. சர்க்கஸில் கிடைத்ததுபோல் நல்ல தீனி கிடைப்பதில்லை. காட்டிலே கனியும் கிழங்கையும் தவிர வேறு ஏது? அதனால் மறுபடியும் சர்க்கஸுக்கே போய்விட எண்ணியது. சர்க்கஸில் ஒரு கண்டிப்பு உண்டு. ஏதாவது ஒரு மிருகம் தப்பி வெளியே ஓடிவிட்டு மீண்டும் பிடிபட்டால் அன்றுமுதல் அதற்குத்

தனியிடம்; அரைவயிறு உணவு; எப்பொழுதும் சவுக்கடி; இதெல்லாம் கிடைக்கும் என்று அதற்குத் தெரியும். அதெல்லாம் கிடைக்காமல் மறுபடியும் சர்க்களில் சேருவதற்கு என்ன வழி என்று அது நெடுநாட்களாய் யோசித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது வலியவே நல்ல வாய்ப்பு அதற்குக் கிட்டியிருக்கிறது. சிங்கத்தைப் பிடித்துக் கொடுத்து 'நல்ல உபகாரி' யென்று பெயர் சம்பாதித்துக் கொள்ளலாம் அல்லவா? அத்துடன் குரங்கின் கௌரவமும் செல்வாக்கும் முன்னைவிட ஒரு படி உயர்ந்து விடும். ஓடி விட்டதற்காகத் தண்டனையும் கிடைக்காதே!

தாமோதரன் சர்க்கஸ் கம்பெனியின் கண்ணிவைத்து மிருகங்களைப் பிடிக்கும் பணியாட்கள் அந்தக் காட்டில் முகாம் போட்டார்கள். சிங்கத்தைப் பிடிக்க வந்த இடத்தில் புலி, கரடி, யானை, ஒட்டகம் முதலியவைகளைப் பிடிப்பதற்கும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். எல்லாம் குரங்காரின் யோசனை.

சர்க்கஸ் கம்பெனியில் இப்பொழுது ஏகக் கூட்டம். சிங்கம், புலி, கரடி, யானை, ஒட்டகம், குரங்கு என்று பல மிருகங்கள் வந்துவிட்டதால் கம்பெனியின் வருவுக்குக் குறைவு இல்லை. குரங்கு இப்பொழுது ரொம்பவும் கொழுத்துவிட்டது.

யானை சர்க்களில் இட்ட வேலையைச் செய்தாலும் அதன் மனமெல்லாம் காட்டிலேயே இருந்தது. 'குளிக்கப் போய் சேற்றை வாரிப் பூசிக்கொண்டதுபோல் குரங்கின் பேச்சைக் கேட்டு இப்படி எல்லோரும் கூண்டோடு வந்து மாட்டிக்கொண்டோமே' என்று வருந்தாத நாளில்லை: ஏதேனும் ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்தால் தப்பித்துக்கொண்டு, முதலில் குரங்கைப் பழி வாங்கிவிட்டு மற்ற மிருகங்களின் விடுதலைக்கு வழி செய்ய வேண்டும் என்று துடிதுடித்தது.

கம்பெனியின் விளம்பரம் ஏகத் தடபுடல். யானைமீது குரங்கு சவாரி செய்துகொண்டு நோட்டீஸ்களை விநியோகம் செய்தது. யானைக்கோ எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. அப்படியே ஒரு போடு போட்டு கீழே நசுக்கிக் கொன்று விடுவோமா என்று ஒரு நினைப்பு. பக்கத்தில் 'ரிங்மாஸ்டர்' அல்லவா வருகிறான்!

யானைக்கு வரவர விடுதலை வேட்கை அதிகமாகிவிட்டது.

அன்று சர்க்கஸ் ஆட்டங்கள் முடிந்து கொட்டகை விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு விட்டன. எல்லோரும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தனர். யானைக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அசைந்து அசைந்து ஆடிக் கொண்டு பலமாக யோசனை செய்துகொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் குரங்குதான் மெத்தையில் சுகமாகப் படுத்துக்கொண்டிருந்தது. யானைக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. 'துரோகிக்குச் சுகவாசம்!' என்று பொருமியது. அடுத்த நிமிஷம் 'கிறீச்' என்று குரங்கு கத்தியது. காரணம் வேறு ஒன்றும் இல்லை. யானை அதன் வாலைக் காலால் அழுத்திக்கொண்டு, "சத்தம் போட்டாயோ! தலையில் ஒரே மிதி! வாயை மூடு" என்றது. குரங்கின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. வாயைப் பொத்திக் கொண்டது. "உன்னை நம்பியதற்குத் துரோகம் செய்தாயே! அதற்குப் பரிகாரம் செய்! நாளை சரஸ்வதி பூஜை. எல்லா மிருகங்களையும் ஆற்றுக்குக் குளிப்பாட்டுவதற்கு அழைத்துச் செல்வார்கள். வழக்கம் போல் இரண்டு துப்பாக்கி வீரர்கள் வருவார்கள். மிருகங்களைக் குளிப்பாட்டிக்கொண்டிருக்கும்பொழுது நீ ஒருவனுடைய துப்பாக்கியைப் பிடுங்கிவிடு. நான் மற்றொருவனுடையதைப் பிடுங்கிவிடுகிறேன். பிறகு பார்த்துக் கொள்வோம்! ஜாக்கிரதை! ஏதாவது மோசம் செய்தாயோ என் உயிர் போனாலும் பரவாயில்லை. நீ உயிருடன் இருக்க முடியாது" என்று உறுமியது.

குரங்காரும் அதற்கு ஒத்துக் கொண்டது. அதற்கு அன்று முழுவதும் வால் 'விண்விண்' என்று வலித்துக்கொண்டேயிருந்தது.

மறுநாள் சர்க்கஸில் இருந்த எல்லா மிருகங்களும் தங்கள் கூண்டுகளோடு ஆற்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டன. இரண்டு துப்பாக்கி வீரர்கள் துப்பாக்கியைக் கையில் ஏந்திய வண்ணம் சென்றுகொண்டிருந்தார்கள். வேடிக்கைப் பார்க்கும் சிறுவர்கள் ஏராளமாகக் கூடிவிட்டார்கள்.

சர்க்கஸின் ஆட்கள் சிறுவர்களை விரட்டிக்கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் ஆனைக் கண்டால் ஓடுவதும் பிறகு மெதுவாக வருவதும் போவதுமாக வேடிக்கைக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

திடீரென்று ஒரே அலறல்! சிறுவர்களும் பெரியவர்களும் ஆற்றிலிருந்து தத்தம் வீடுகளை நோக்கி ஓடினார்கள். இரண்டு துப்பாக்கிக்காரர்களில் ஒருவன் யானையால் மண்டையில் அடிக்கப்பட்டு, தண்ணீரோடு இழுத்துச் செல்லப்பட்டான். மற்றவன் குரங்கினிடம் துப்பாக்கியைப் பறிகொடுத்துவிட்டு ஓட்டம் பிடித்தான்.

யானை எல்லாக் கூண்டுகளின் கதவுகளையும் திறந்துவிட்டது. சிங்கமும் புலியும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓட்டமெடுத்தன. ஒட்டகம் வேகமாக ஆற்றைக் கடந்துகொண்டிருந்தது. யானையார் எல்லோரையும் விடுவித்த பிறகு திரும்பியது. அங்கே குரங்கார் துப்பாக்கியைக் கையில் பிடித்தவாறு ஒன்றும் புரியாமல் உட்கார்ந்திருந்தார். யானைக்குக் குரங்காரைக் கண்டதும் கோபம் அதிகமாயிற்று. யானை நேராக குரங்காரிடம் வந்தது. 'துரோகி, ஒழி' என்று கூறிக்கொண்டு குரங்காரை ஒரு மிதி மிதித்தது.

அந்தோ....

'டுமீல்' என்று ஒரு துப்பாக்கி வேட்டு! அடுத்த விநாடி யானையார் பெரும் சப்தத்துடன் கீழே சாய்ந்தார். யானையார் மிதித்த வேகத்தில் குரங்கின் கையிலிருந்த துப்பாக்கியின் விசையில்பட்டு, குண்டு யானையின் அடிவயிற்றில் பாய்ந்தது போலும். 'கடமையைச் செய்துவிட்டோம்' என்ற சந்தோஷத்தோடு யானையார் சாய்ந்தார்!

காட்டில் ஜனநாயக ஆட்சி தொடங்கியது. மிருகேந்திரனாகிய சிங்கம் கண்ணியமான முறையில் ஜனாதிபதியாகப் பதவியேற்று, காட்டை ஆளும் அதிகாரத்தையெல்லாம் பிரதம மந்திரியாகிய கரடியார் வசம் அளித்துவிட்டார்.

நீங்களும் நானும்

[இந்தப் பகுதிக்கு இப்பொழுது ஏராளமான கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன; முடிந்த வரையில் வரிசைக் கிரமமாகப் பதில்கள் தரப்பட்டு வருகின்றன. தங்கள் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே என்று மீண்டும் கடிதம் எழுதாதீர்கள். இரண்டு இதழ் பொறுத்திருந்து பாருங்கள். அதற்குள் விடை வர வில்லையானால் வேறு கேள்விகள் எழுதிக் கேட்க வேண்டியதுதான்.
—ஆர்வி.]

ஏ. தண்டபாணி, டி. என். பாளையம்.

கே: பெண்பிள்ளைகள் ஆண் பிள்ளைகளைவிட அறிவில் குறைந்த வர்களாமே!

ப: இருக்கலாம்; ஆனால் ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமான வர்கள் என்று உலகம் ஒப்புக் கொண்டுவிட்டது! நிரூபித்தும் ஆகிவிட்டது!

மு. தெ. மு. காதர், பதுளை.

கே: அதிருஷ்டம் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

ப: உண்டு. உழைத்துப் பாடு பட்டால் அதிருஷ்டம் அடிக்கிறது.

கே. தண்டபாணி, கோவை.

கே: உயரமாக வளர வழி இருக் கிறதா?

ப: செயற்கை முறையில் உயரச் செய்வதற்கு நிச்சயமான வழி இருப்பதாகத் தெரியவில்லை என்கி றார் ஒரு டாக்டர். ஆனால் பாலும் கனி வகைகளுமாகத் தினம் சாப் பிட்டு வந்தால் செழிப்போடு உயர லாம் என்று சில டாக்டர்கள் கருதுகிறார்கள்.

வி. சங்கர், ஹைதராபாத்-35.

கே: டி. கே. சி. எழுதிய சிறந்த புத்தகம் ஒன்றைக் கூறுங்கள்.

ப: இதய ஒலி.

பி. ஏ. இந்திராவதி, உதகை.

கே: பனிப் பாறைகள் எந்தப் பிரதேசத்தில் அதிகமாய் இருக் கின்றன?

ப: அன்டார்டிக் கடற் பகுதியில் தான். பூமியின் நிலப்பரப்பின்மேல் 120 அடி கனத்துக்கு மூடும்படி யான அளவு பனிப் பாறைகள் அங்கே இருக்கின்றனவாம்.

இ. டி. வேலு, காடையாம்பட்டி.

கே: காகித விலை ஏற்றம் காரண மாகக் கண்ணன் பக்க அளவு குறையுமா?

ப: இதுவரை நாற்பது பக்கத் தோடு கண்ணன் வெளிவந்தது. இனி முப்பத்திரண்டு பக்கங்களாக வெளியிட உத்தேசம்.

பி. காமாட்சி, ஆவடி.

கே; பிறநாட்டு நல்லறிஞர் நூல் களைத் தமிழில் நீங்கள் வெளியிட் டிருக்கிறீர்களா?

ப: பல கட்டுரைகளை மஞ்சரியி லும், மகான் டால்ஸ்டாயின் கதை ஒன்றைத் தனிப் புத்தகமாகவும் தமிழாக்கம் செய்திருக்கிறேன்.

ஆ. சுப்பையா, நாப்பட்டி,

கே: புத்தர் வேதங்களைப் பழித் தார் என்று சிலர் கூறுகிறார்களே, உண்மையா!

ப: அவர் பழித்ததாகத் தெரிய வில்லை. வேதங்களைக் கண்டித்த போதிலும் வேதம் பயில்வதை அங் கங்கே அவர் பெருமைப்படுத்தி யிருக்கிறார். இதை நான் சொல்ல வில்லை. புத்த மதத்தின் இன்றைத் தூண்போன்ற ஒருவர் கூறியிருக் கிறார். தர்மானந்த கோஸம்பி என்ற அவர் புத்த மதத்தைப்

பற்றிப் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதியவர்.

ஜி. ராமகிருஷ்ணன், சென்னிமலை.

கே: மிகவும் உயரமாகவும் வேகமாகவும் பறக்கக் கூடிய பறவை எது?

ப: கழுகு. கொட்டப் பருந்தும் கருடனும் கிட்டத்தட்ட கழுகைப் போலவே உயரமாகவும் வேகமாகவும் பறக்கக் கூடியவைதான்.

கே: டாகுரின் நூல்களில் சிறந்தது எது?

ப: கீதாஞ்சலி.

கே. சுப்பிரமணியம், தஞ்சை.

கே: ஏழையின் நெஞ்சம் எதைப் போன்றது?

ப: வெண்ணெயைப் போன்றது. உரிய சமயத்தில் எடுத்து உருக்காவிட்டால் ஊசி யடித்துப் போகிறது.

என். வேதகிருஷ்ணன், மாயூரம்.

கே: தாங்கள் ஏதாவது ஒரு போராட்டத்தில் குதித்தால் என்ன?

ப: நான் அப்படிக் குதித்துப் பதினைந்து வருஷங்கள் போல ஆகி விட்டனவே! போராட்டம் எது என்கிறாயா? வயிற்றுப் போராட்டம்தான். அதுதானே வாழ்க்கைப் போராட்டமும்!

என். ஆர். தீத்தாரப்பன், தென்காசி.

கே: தென்னிந்தியாவில் மிகப் பெரிய நதி எது?

ப: கோதாவரி.

சரோஜா, திருவனந்தபுரம்.

கே: இந்தியாவிலேயே நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் பெரியது எது? எந்த விதத்தில்?

ப: நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் இப்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வரும் பக்ரா-நங்கல் திட்டம்தான் இந்தியாவிலேயே மிகப் பெரிய திட்டம். அது கட்டி முடிவு பெற்றால் அநேகமாக உலகிலேயே பெரிய அணையாக விளங்கும். இப்பொழுது அமெரிக்காவிலுள்ள ஹூவர் அணைதான் உலகிலேயே மிக உயரமான அணைக்கட்டாக விளங்குகிறது. அதன் உயரம் 720 அடி. ஆனால் பக்ரா அணை 740 அடி உயரம் இருக்குமாம். 170 கோடி ரூபாய் திட்டத்தில் உருவாகும் இந்த அணை 1960-ஆம் வருஷம் கட்டி முடிவுபெறும் என்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஹீராகுட் அணைதான் இப்பொழுது இந்தியாவில் கட்டப்பட்டுள்ளவற்றில் பெரியது.

கே: ரஷ்ய சர்வாதிகாரி, அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டிஷ் பிரதம மந்திரி இவர்களில் அதிக அதிகாரம் படைத்தவர் யார்?

ப: அமெரிக்க ஜனாதிபதிதான் அதிக அதிகாரம் படைத்தவர். ரஷ்யாவில் இப்பொழுது சர்வாதிகாரி இல்லை. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி முதல் காரியதரிசிக்கு ரஷ்யப் பிரதமரைவிட அதிக செல்வாக்கும் சக்தியும் இருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு சட்டப்படி இல்லாவிட்டாலும் சம்பிரதாய வழியில் இப்பொழுது முன்பைவிட அதிக அதிகாரம் சேர்ந்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதிக்கு அடுத்தபடி அதிகாரம் படைத்தவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரி.

கணபதி, பேட்டை.

கே: சுதந்தரத்துக்குப் பிறகு நாம் எந்தத் துறையில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்?

ப: செயலைவிட வாய்ப் பேச்சில் அதிகத் தூரம் முன்னேறியிருக்கிறோம். செயலில் இன்னும் அதிகத் தூரம் முன்னேற வேண்டும். கட்டின வீட்டுக்குப் பழுது சொல்வதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு செயலில் இறங்கினால் பல துறைகளில் முன்றேலாம். முன்னேற்றத்துக்கு அரசியல் கட்சிகளே பெரும் தடையாக விளங்குகின்றன.

பி. ஜி. நந்தகுமார், பம்பாய்-14.

கே: ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த அந்த அபூர்வ சகோதரர்கள் ரைட் சகோதரகள் தானே?

ப: ரொம்ப ரைட்!

ஆ. சுப்பையா, நாப்பட்டி.

கே: எனக்குக் காது இரைச்சல் அதிகமாக இருக்கிறது. காது செவிடாகிவிடுமா?

ப: காது இரைச்சல் ஏற்படாமலே காது செவிடாகி விடுவது உண்டு. அதனுல் வீண் கவலே வேண்டாம். கேள்வி நரம்பு அதிர்ச்சியுற்ருல் இரைச்சல் ஏற்படுமாம். ஆகவே வீண் கவலே கொள்ளாமல் உடனே டாக்டரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

கே. எஸ். ஆர்., பெருவெம்பு

கே: எழுத்தாளர் ராஜியின் முழுப்பெயர் என்ன? அவர் புத்தகம் ஏதாவது கண்ணன் வெளியீடாக வந்திருக்கிறதா?

ப: 'ராஜி' அவர்களின் இயற்பெயரைக் கூறுவதற்கு இல்லே. அவர் எழுதிய தங்க மாம்பழம் என்ற கதை கண்ணன் வெளியீடாக இப்போதுதான் வந்திருக்கிறது. விலே ரூ 2/-.

எம். டி. ஊமைத்துரை,
மத்தம்பாளேயம்.

கே: காலில் செருப்பு இல்லாமல் நடந்தால் மூளேக்கு ஏதாவது கெடுதல் ஏற்படுமா?

ப: நல்ல வெயில் நாட்களில் மூளேக் கொதிப்பு ஏற்படும் என்று டாக்டர்கள் கூறுகிருர்கள். காலில் செருப்பு இல்லாமல் நடப்பது சாதாரணமாகவே சுகாதாரக் குறைவுதான்.

எம். பி. ராமசாமி,
மாங்தேகவுண்டன்புதூர்.

கே: கண்ண்ன் பத்திரிகை மொத்தம் எவ்வளவு பிரதிகள் விற்பனேயாகின்றன?

ப: சுமார் பதினேந்தாயிரம் பிரதிகள் விற்பனேயாகின்றன. ஆனுல் ஒன்றுக்கு ஆறுபேர் விதம் கிட்டத்தட்ட லட்சம் குழந்தைகள் அதைப் படிக்கிருர்கள்.

அரிகிருஷ்ணன், சென்னே 1

கே: அமெரிக்காவில் சாதிபேத ஏற்றத் தாழ்வுகள் உண்டா?

ப: உண்டு; ஏராளமாக உண்டு. நீக்ரோ, சிவப்பு இந்தியர், வெள்ளேயர் என்கிற நிறபேதங்கள். கிறிஸ்துவர் - யூதர் - மற்றவர் என்கிற மதபேதங்கள். பணக்காரன், ஏழை, மேற்கு, கிழக்கு, தூரக் கிழக்கு என்கிற திசைவர்க்கபேதங்கள். கத்தோலிக்கர், பிராடஸ்டண்ட் என்கிற சமய பேதங்கள், ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி, லிபரல் கட்சி, தொழிலாளர் கட்சி என்கிற கட்சி பேதங்கள். இன்னும் என்ன என்ன விதமான பேதங்கள் வேண்டுமோ அத்தனேயும் உண்டு.

கே. ராமநாதன், தூத்துக்குடி.

கே: இப்பொழுது ஏதோ ஒரு ரகசிய ஆயுதம் ஒன்றை ரஷ்யா கண்டுபிடித்திருக்கிறதாமே, அது என்ன?

ப: அதன் பெயரும் விவரமும் சரிவரத் தெரியவில்லே. ஆனுல் அந்த அணு ரகசிய ஆயுதம் மணிக்கு 20,000 மைல் வேகத்தில் சென்று தாக்கக் கூடியதாம். இத்தகைய ரகசிய ஆயுதம் அமெரிக்காவிடமும் இருக்கிறதாம்.

சுப்புடு, கோவை

கே: உயர்ந்த மனிதன் யார்?

ப: எது நியாயம் என்று எவன் அறிந்து நடக்கிருனே அவன்தான்.

கே: எதையும் திறமையோடு செய்வது எப்படி?

ப: பேச்சாகட்டும், செயலாகட்டும். எதையும் இயற்கையாகச் செய்வதே திறமையோடு செய்வதாகும்.

எஸ். ராஜகாந்தம், கொழும்பு-12

கே: உலகில் கல்வியறிவுள்ளவர் எத்தனே பேர்?

ப: சமீபத்திய ஐ. நா. கல்வி அறிக்கையின்படி உலகில் நூற்றுக்கு நாற்பது பேர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

ஆர். பி. அலமேலு, திருச்சி-3

கே: வகுப்பில் முதன்மையாக இருப்பதே பலருடைய வெறுப்புக்கு என்னே ஆளாக்குகிறது. இதைத் தவிர்க்க வழி என்ன?

ப: வெறுப்பை வெறுப்பினுல் தணிப்பதற்கில்லே. அன்பினுல் வெல்ல முடியாதது எதுவுமில்லே. இதுவே பழைய அறநெறி.

இரவெல்லாம் உயிர் மரணப் போராட்டம்! புயலின் சீற்றம் தணியவில்லை. களைப்பாலும் பயத்தாலும் இளவரசி படகிலே மூர்ச்சையுறுகிறாள். தலைவன் படகு கவிழாமல் பிடித்துக் கொண்டிருக்கிறான்.
கீழ்த் திசையில் சூரியன் உதிக்கிறான். தோப்பும் துரவுமாக இருக்கும் ஒரு தீவின் கரையிலே படகு ஒதுங்கிக் கிடக்கிறது. இளவரசி இன்னும் மூர்ச்சை தெளியாமல் கரைமீது விழுந்து கிடக்கிறாள். தலைவன் முதலில் மூர்ச்சை தெளிந்து எங்கே யிருக்கிறோம், என்ன நடந்தது என்று...
மூன்றாம் நாள் ....
எப்படி இங்கே வந்தோம்? என்ன நடந்தது?
இளவரசியைத் தூக்கியவாறு தலைவன் கரையை நோக்கி நடந்து செல்கிறான்........

இது என்ன தீவு
தெரியவில்லையே!
எங்கேயாவது மனிதர்கள், வீடுகள் கண்ணில்
படாதா என்று தலைவன் தேடிச் சென்ற போது...
ஆ! உயிரோடுதான் இருக்கிறேனா?
இது, இந்த உலகம் தானா? வேறு
உலகமா? எப்படி இங்கே வந்தேன்?
அதோ தூரத்தில்
புகை தெரிகிறதே,
வீடு ஏதாவது இருக்கும்!
பார்க்கலாம்!

(தொடரும்).

ஒருவனைக் கொண்டு...

சங்கரசுப்பு

"வரப்போகும் ஸ்டேஷன் எது?"

"கும்பகோணம்."

"கும்பகோணமா..?" என்று சற்று ஆச்சரியத்தோடு கேட்ட அம்மா எழுந்துபோய் ஜன்னலருகே இருந்த காலி இடத்தில் உட்கார்ந்தாள். பெண் பார்க்க வந்த பையன் மாதிரி ஜன்னல் வெளியே ஓடின பச்சை வயல்களையும், பாசனம் செய்துகொண்டிருந்த பாமர ஜனங்களையும் ஆராய்ந்து, அதிசயத்தோடு பார்த்தாள்.

"கும்பகோணம் எதற்கோ பேர் பெற்றதாயிற்றே!"

"எதற்கோ என்ன? ஊர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். ஊரில் கோயில் இருக்கிறது. குளமும் இருக்கிறது. எல்லா ஊர்களிலும் இருக்கும் பச்சைக் குளம் மாதிரித் தான். ஆனல் இந்த ஊர்க் குளம் மகிமை வாய்ந்தது. மகாமகக் குளம் என்று பெயர். பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறை பரத கண்டத்திலுள்ள எல்லாப் புண்ணிய நதிகளும் இந்தக் குளத்தில் வந்து கலப்பதாக ஐதீகம். அப்போது குளத்தில் மூழ்கினல் பண்ணின பாபமும், பண்ணப் போகும் பாவமும் பறந்து விடுமாம்."

"ஸ்தல புராணம் எனக்கும் தெரியும். ஆனல் நான் பேர் பெற்றதாகக் கேள்விப்பட்ட தினுசு வேறு."

"ஒகோ! சரிதான், நீ பெண்ணல்லவா! கும்பகோணம் என்றல் உன் ஜாதிக்கு வெற்றிலை, புடைவை, பித்தளைப் பாத்திரங்கள் தானே நினைவு வரும்!"

"போதுமே வக்ரப் பேச்சு! 'கும்பகோணம்' என்று ஏதோ அர்த்தத்தில் சொல்வார்கள். பூடகமாக எதையோ குறிப்பார்கள்."

"நீ எதைக் குறிக்கிருய் என்று எனக்குப் புரியவில்லை. புரியச் சொல்லேன்."

அம்மா கூறினள்: "என் தகப்பனர் ஒரு கதை சொல்வார். ஒரு சமயம் திருமலை என்பவர் தீனதயாளு என்பவரிடம் ஒரு வாரத்திற்குள் திருப்பித் தருவதாய் நூறு ரூபாய் கடன் கேட்டு வாங்கிப் போனராம். ஆனல் திருமலை சொன்னபடி ஒரு வாரத்திற்குள் திருப்பித் தரவில்லை. கடன் வாங்கின நபர் சொன்ன 'வாரம்' வராமலே பலவாரங்கள் போய்க்கொண்டேயிருந்தனவாம். கடன் கொடுத்தவர் நெஞ்சம் கலங்கினர். பட்டு வேஷ்டியை கட்டிக் கொள்ளக் கொடுத்து விட்டு, பலகையையும் தூக்கிக்கொண்டு பின்னல் ஓடின பிரகஸ்பதி போல், கடனைக் கொடுத்துவிட்டு, திருமலை வீட்டிற்கும் ஆபீஸிற்குமாகக் கால் தேய நடந்தார் தீனதயாளு.

"'தருகிறேன். எங்கே ஓடிப் போகப் போகிறேன்? வீட்டில் ஏகப்பட்ட செலவு. மனைவிக்கு அபார்ஷன்' என்று சாக்குப் போக்குச் சொல்லி இன்னும் பல வாரங்களைக் கடத்தினராம் திருமலை. வாரங்கள் மாதங்களாகி வருஷம் ஒன்றும் ஓடிவிட்டது. தீனதயாளு சலித்துப் போய்விட்டார். வாங்கின பணத்தைத் திருப்பித் தரும் உத்தேசமாவது இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள ஒரு நாள், கோபத்தோடு தீனதயாளு, திருமலை வீட்டிற்குச் சென்றர். அவர் போன சமயம், திருமலை வேறெரு நண்பரோடு பேசிக்கொண்டிருந்தார். இதுதான் சமயம், அவர் நண்பர் முன்னிலையில் கேட்டு மானத்தை வாங்கினல்தான் பணம் பெயர வழி ஏற்படலாம் என, 'என்ன சார், அந்த நூறு ரூபாய் பணம்..' என்று ஆரம்பித்தாராம் தீனதயாளு.

''உடனே திருமலை, 'அந்த நூறு ரூபாய் பணம்தானே..? இப்போது அவசரமில்லை. உங்கள் சௌகரியம் போல் கொடுங்கள்' என்று தாம் கடன் கொடுத்ததுபோல் கூறினுராம். அதைக் கேட்டதும் தீனதயாளு, 'என்னையா இது? என்னமோ, நான் உம்மிடமிருந்து கடன் வாங்கினதுபோல் பேசுகிறீர்? இந்தக் கும்பகோணத்து வேலை என்னிடம் வேண்டாம். பணத்தை வைத்துவிட்டு மறுகாரியம் பாரும்' என்று கோபத்தோடு சொன்னுராம். பிறகு..''

''பிறகு என்ன? திருமலை பணத்தைத் திரும்பக் கொடுத்தாரா இல்லையா?''

''கொடுத்தாரோ, கொடுக்கவில்லையோ நமக்கு அக்கறையில்லை. தீனதயாளு 'கும்பகோண வேலை' என்று குறிப்பிட்டாரே, அதற்கும் இந்தக் கும்பகோணத்திற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?''

''உண்டோ, என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனுல் 'கும்பகோண வேலை' என்ருல் புரட்டு, பித்தலாட்டச் செய்கைகளை குறிக்கிறது என்று மட்டும் எனக்குத் தெரியும்.''

* * *

வண்டி கும்பகோணம் ஸ்டேஷனில் நின்றது. பிளாட்பாரத்தில் ஒரே களேபரம். வண்டியிலிருந்து இறங்குவோரும் ஏறுவோருமாகப் பிளாட்பாரத்தையே அடைத்துக் கொண்டிருந்தார்கள். போதாக் குறைக்குத் தள்ளுவண்டி வியாபாரிகளும் கால்நடை விற்பனையாளர்களும் குறுக்கும் நெடுக்குமாகத் தாங்கள் கொண்டு சென்ற பொருள்களின் பெயர்களைச் கூவிச் சென்ற வண்ணமா யிருந்தார்கள்.

''காபி...சூடான காபி..டிகிரி காபி..''

''கதம்பம்..வாசனைக் கதம்பம் ..வாடாத கதம்பம்.''

''கலைமகள், மித்திரன், ஆனந்த விகடன், கல்கி, கதிர், கண்ணன்..''

கும்பகோணம் ஸ்டேஷன் கலகலப்பாய், கண்கொள்ளாக் காட்சியாய்த் திகழ்ந்தது. கும்பகோணம் ஸ்டேஷன் என்ன, எந்தத் தமிழ் நாட்டு ரெயில்வே நிலையமுமே அப்படித்தான் இருக்கும்!

நான்கைந்து நிமிடங்கள் கழிந்தது தெரியாமல் நான், அப்பா, அம்மா மூவரும் பிளாட்பார நாடகத்தை ரசித்துக்கொண் டிருந்தோம்.

''ஆமாம்..இந்த ஸ்டேஷனில் இட்டிலி கிடைக்குமோ அல்லியோ..?'' என்று கேட்டாள் அம்மா.

''ஏன்..? கிடைக்குமே. இந்த ஸ்டேஷனில் என்ன, எல்லாத் தென்னிந்திய ரெயில்வே ஸ்டேஷன்களிலும் இட்டிலி கிடைக்கும். ஸ்டேஷனில் பிரயாணச் சீட்டு கிடைக்காமற் போனுலும் போகுமே ஒழிய இட்டிலிக்கு எந்த நாளும் அஸ்தமனம் வந்துவிடாது.''

''எனக்கு இட்டிலி சாப்பிட வேணும் போலிருக்கிறது. இறங்கிப் போய் வாங்கி வருகிறீர்களா?''

அம்மா பிள்ளைதாய்ச்சிக்காரி. ஆகையால் அப்பா உடனே கோபத்தோடு, ''இப்போதே சொல்லி விட்டாயே..வண்டி கிளம்பின பிற்பாடு சொல்லியிருந்தால் நன்ருயிருந்திருக்கும்..'' என்று கேலியாகச் சொன்னுர்.

''ஏன்..? வண்டி கிளம்ப நேரமாகி விட்டதா..? இப்போது தானே வந்து நின்றது.''

''இந்த ஸ்டேஷனில் ஆறு நிமிஷங்கள்தான் நிற்கும். ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன.''

''அப்படியென்ருல் இட்டிலி...?'' அம்மா சொன்னதைக் காதில் வாங்கிக்கொண்டே, ஜன்னல் வழி வெளியே பார்த்தார் அப்பா. எங்கள் பெட்டிக்கு எதிரே பிளாட்பாரத்தில் ஊன்றியிருந்த விளக்குக் கம்பத்தை ஒட்டினுற் போல் நின்ற பையனை அப்பா பார்த்தார். அப்பா அவனைப் பார்த்தபோது அவனும் அப்பாவைப் பார்த்தான்.

"இங்கே வா.. தம்பி" என்று கூப்பிட்டார்.

"என்னங்க சார்....?" என்று கேட்டுக் கொண்டே ஜன்னலருகே வந்தான் அந்தப் பையன்.

"ஒரு காரியம் செய்கிருயா? ஓடிப் போய் ஐ.ஆர். ஆரிலிருந்து இட்டிலி வாங்கி வருகிருயா? இதோ இந்தா பத்தணு. எனக்கு எட்டு இட்டிலி வாங்கிவா. பாக்கி இரண்டணுவிற்கு உனக்கு இட்டிலி வாங்கிக்கொள். என்ன வாங்கி வருகிருயா?"

"சரி சார்..!"

"ஓடிவரணும், வண்டி கிளம்பிடறதுக்குள்ளே!" பையன் அப்பா கொடுத்த சில்லறையை வாங்கிக் கொண்டு ஸ்டேஷன் கும்பலில் புகுந்து ஓடினுன்.



"முன்பின் தெரியாத பையனிடம் எதற்கு இப்படிப் பத்தணுப் பணத்தை கொடுத்தனுப்பினீர்கள்? அவன் திரும்பி வருவாணு?" என்று பையன் தலைமறைந்ததும் அம்மா கேட்டாள்.

"வராமல் என்ன செய்வான்? பார்த்தால் நல்லவன்மாதிரித் தென்பட்டான். ஓர் ஆள் எப்படிப் பட்டவன் என்று முதல் பார்வையிலே நான்தான் நிச்சயம் பண்ணிவிடுவேனே! அதுதான், அவன் நமக்குச் செய்யும் ஒத்தாசைக்கு இரண்டணு 'பக்ஷீஸு'ம் கொடுத்து அனுப்பிவிட்டேனே!"

"ஒருவேளை அவன் நல்லவனுயிருந்து நீங்கள் கொடுத்த காசு அவனைக் கெட்டவனுக்கி விட்டால்..?"

"'கும்பகோணம்' என்பதற்குப் பொருள் கேட்டாயே, அது தெரிந்துவிடும்.."

கார்டு ஊதின 'விசி'லின் சப்தம் கேட்டது. "சரி, கும்பகோணம் வேலைக்கு விளக்கம் தெரிந்து விட்டது. நீங்கள் ஜன்னல் வெளியே தலை நீட்டி எட்டிப் பார்க்க வேண்டாம், ரெயில்வே விதிகளை மீறி. உட்காருங்கள்" என்று அம்மா, அப்பா செய்த தவற்றைக் குத்திக் காண்பித்தாள்.

வண்டி கிளம்பவாரம்பித்தது.

"அதோ பையன் கையில் 'பார்ச'லோடு ஓடி வருகிருன்" என்று அப்பா கத்தினுர்.

பல மாதங்களாகக் கப்பலில் பிரயாணம் செய்து கரையைக் காண மாட்டோமா என்று ஏங்கின கொலம்பஸ் கண்ணில் பறவைக்

கூட்டமும் பச்சை விருட்சங்களும் பட்டவுடன் எப்படி எழுத முடியாதபடி சந்தோஷம் கொண்டானே அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சி கொண்டார் அப்பா, ஓடி வரும் அந்தப் பையனைப் பார்த்ததும்: "அதோ பார், பையன் ஓடி வர்ருன். உலகத்திலே எல்லோரும் ஏமாற்று வேலை செய்பவர்கள் என்று நினைத்துக்கொண்டாயா...? நல்ல பையன்" என்று அப்பா நற்சாட்சிப் பத்திரம் தயார் பண்ணினார்.

பையன் கையில் பொட்டலத்தோடு ஓடும் வண்டியைத் தொடர்ந்து பிளாட்பாரத்தில் ஓடி வந்தான்.

"சார்....ஐ. ஆர். ரூமிலே இரண்டே இரண்டு இட்டிலிதான் இருந்தது. அதை எனக்கு வாங்கிக் கொண்டேன். இதோ, இருக்கு பொட்டலம். உங்கள் துட்டு எட்டணு இதோ இருக்குது. அது என்னிடமே இருக்கட்டும்; இன்னொரு சமயம் இந்தப் பக்கம் வந்தால் எனக்கு லெட்டர் போடுங்

கள். நான் எட்டு இட்டிலி வாங்கித் தயாராக வைத்திருக்கிறேன்'' என்று இரைக்க இரைக்கக் கூறி ஞன் பையன்.

பையனின் பேச்சு அப்பாவின் செவிகளில் ஏறி அதன் அர்த்தம் தெளிவாவதற்குள் வண்டி பிளாட் பாரத்தைக் கடந்து விட்டது. அந்தப் பையன் கையை உயரத் தூக்கிக் காட்டிக்கொண்டு நின்று அவர்களுக்கு விடையளித்தான்.

''கும்பகோண வேலை என்ருல் என்ன என்று உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிந்துவிட்டது'' என்ருள் அம்மா எகத்தாளமாக.

''சே! அப்படிச் சொல்லாதே. இந்தப் பையன் மாதிரி எப்பொழு தாவது யாராவது நடந்துகொண் டிருப்பார்கள். அதற்கு ஊரே பிணைப்பட்டதா? ஒரு காய் வெம் பிப் போய்விட்டால் மரத்தையே சோடை எனத் தீர்மானிப்பதா? சென்னையில் யாரோ சிலர் ராமர் விக்கிரகத்தை உடைக்க அறிக்கை வெளியிட்டவுடன், பம்பாயில் உள்ள வட இந்தியர்கள் என்ன பேசிக்கொண்டார்கள், தெரியுமா? 'இந்தத் தென்னிந்தியர்கள் எல் லோருமே நாஸ்திகர்கள் போலிருக் கிறது, ராமர் விக்கிரகத்தை உடைக்கப் போகிருர்களாமே!' என்று தமிழ்நாட்டிற்கே நாஸ்திகப் பட்டம் தந்துவிட்டார்கள்! அது போல ஒருவனைக் கொண்டு ஊரை மதிப்பிடக் கூடாது. ஊர், பானைச் சோறல்ல!'' என்று அப்பா தாம் பத்தணு இழந்ததையும் லட்சியம் செய்யாமல் பேசினுர்.

வண்டி கும்பகோணம் எல்லை யைத் தாண்டிக்கொண் டிருந்தது. நான், திருச்சி ஜங்ஷனில், வழி யனுப்ப வந்த சீதாராம மாமா வாங்கிக் கொடுத்த பிஸ்கோத்துப் பொட்டலத்தைப் பிரிக்க வாரம் பித்தேன்.

கனகாபிஷேகம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் கனகாபிஷேகம் இம்மாதம் 6-ஆம் தேதி சின்னக் காஞ்சீபுரத்தில் நடை பெற்றது. பட்டத்துக்கு இளைய சுவாமி கள் ஸ்ரீ ஜகத்குருவுக்கு புண்ணிய தீர்த் தங்களால் அபிஷேகமும் பொற்காசு களால் அர்ச்சனையும் செய்தார்கள். இந்த வைபவத்துக்கு ஆயிரக்கணக் கான பிரமுகர்களும் ஆஸ்திகர்களும் வந்திருந்து, ஸ்ரீ ஜகத்குருவின் ஆசியைப் பெற்றுக்கொண்டார்கள். கனகாபிஷேகம் செய்த இந்தப் பொற்காசுகள் எளியவர்களுக்கான தர்மங்களுக்குச் செலவிடப்படுமாம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர் கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம். பலர் வேண்டுகோளுக்கிணங்க தொடர்கதை அனுப்ப வேண்டிய தேதியை ஒரு மாதகாலம் தள்ளிப் போட்டிருப்பதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

நிபந்தனைகள்:—

1. சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.
2. காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுத வேண்டும்.
3. கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.
4. தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.
5. குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
6. முடிவுத் தேதி 30-9-'57.

—ஆசிரியர்

கண்ணன் கிளைக் கழகம்

உத்தமபாளையம் { உப தலைவர்: தே. சுபாஷ் / பொருளாளர்: சாம்பசிவன் / காரியதரிசிகள்: ஜகந்நாதன் மோகன் }

ஏழு பேர்கள்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'வெண்ணிலா' என்ற மாத கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது.

சென்னை-1 { உப தலைவர்: தெ. பா. சீதாராமன் / செயலாளர்: வே. இரா. வேணுகோபாலன் / பொருளாளர்: ஏ. எம். வெங்கடாத்திரி }

ஐந்து பேர்கள்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'இள ஞாயிறு' என்ற (மாத இதழ்) கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. சீதாராமன், 38, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1 என்ற விலாசத்துக்கு கதை முதலியன அனுப்பலாம்.

கொழும்பு-11 { உப தலைவர்: அ. இரத்தினம் / காரியதரிசி: மொரூல் / பொக்கிஷதார்: செலஸ்டியன் }

ஆறு பேர்கள்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'சூரிய காந்தி' (மாதம் இரு முறை) என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப் படுகிறது. கதைகள் 178. செட்டியார் தெரு, கொழும்பு-11 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

பேனா நண்பர்கள்

1. S. ராமானுஜம், நான்காம் படிவம், கழக உயர்நிலைப்பள்ளி, பசுவந்தனை போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா.
2. P. C. வாசுதேவன், S/o P. R. சக்கிரபாணி ஐயங்கார், 263 (QMC) முதலியார்த் தெரு, தாமரைக் குளம், கொல்லம்-(கேரளம்).
3. A. H. M. அப்துல் காதர், 'ஸஹிரா விலா' நெ. 1461. புரால்ல வீதி, வெலிகாமம், இலங்கை.
4. C. செல்லத்துரை, சாதனா கிருஷ்க பாடசாலை, கரடியன் ஆறு, கிழக்கு இலங்கை.
5. V. F. சந்திரன், 94-1, செந் அந்தோணி மாவத்தை, கொழும்பு-13, இலங்கை.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

கண்ணன் தீபாவளி மலர்

புதுமையும் பொலிவும் கொண்ட மலர்

கண்ணன் தீபாவளி மலர் குழந்தைகளுக்
கான சிறந்த மலர். குழந்தைகளுடைய
குதூகலத்தை வளர்க்கும் வண்ண மலர்

★ பிரபல எழுத்தாளர்களின் அருமை யான கதைகள்

★ மூவர்ணச் சித்திரங்கள்; வெட்டி ஒட்டும் வேடிக்கைப் படங்கள்

★ முழுநீளக் கதைகள்; சித்திரக் கதைகள்

★ ஹாஸ்யத் துணுக்குகள்; படங்கள்

★ அறிவைப் பெருக்கும் புகைப் படக் கட்டுரைகள்

உல்லாசமான கண்ணன் மலர்

விலை ஒரு ரூபாய்தான்

இன்றே உங்கள் பிரதிக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

கண்ணன் காரியாலயம், சென்னை - 1.